1487

உ

மனமோகினி

ஓர் மாதாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

தொகுதி 2.] 1923ஞு ஆகஸ்டுமீ 1௳ [பகுதி 7.

இதில் வெளிவரும் "பவளத்தீவு" அல்லது
"குடும்பசாபம்" என்னும் நாவல்

ஸ்ரீமான்
ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்
இயற்றப்பட்டது

17 SEP 1923

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டது

1923

ரிஜிஸ்டர்ட்] [காபிரைட்.

மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல வி[illegible]ருக்கும் இடந் தர வேண்டியதாயிருத்தலின், அதில் ஒவ்வொரு [illegible]த்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடு[illegible]ருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதாயிருக்குமென்று இதனை 1922ளு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் முதலில் வெளியாகி முடிந்தது. இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. 1923ளு மார்ச்சுமீ 1உ முதல் இதே நூலாசிரியரால் வரையப்பட்ட "பவழத்தீவு" அல்லது "குடும்ப சாபம்" என்ற மிக்க அதிசயமான நாவல் தொடங்கி, வெளியாகி வருகிறது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

17 SEP 1923

பிரபு தன் புதல்வியை நோக்கி "கூடியவரையில் நீ சௌக்கியமடைந்திருப்பதற்காக நான் மிக்க சந்தோஷமடைகிறேன். நாளைக்கு நீயும் என்கூட வரலாகும். நகரத்திலுள்ள பிரபுக்களெல்லாம் செல்வார்கள். நாம்மட்டும் போகாதிரு[illegible]ங்காய்த் தோன்றுது" என்றார்.

குசலாம்பாள் கனவிற் பேசுகிறவள்போல் அதற்குத் தக்க விடையளித்தாள். ஏனெனில் அவள் மனதில் மிக்க கலவரமும் துயரமும் உண்டாயிருந்தன. முதலாவது வில்வநாதன்மேல் அவளுக்கு அன்பிருந்ததால் அவன் கள்ளர் கூட்டத்தைச்சேர்ந்தவனோ என்று உண்டான சந்தேகத்தால் அவள்மனம் மிக்க வேதனை யடைந்திருந்தது. அதோடு அவனையினிச் சந்திக்கலாகாது அவனிடம் பேசலாகாது என்று தன் தந்தை கூறியது அவளுக்குப் பொறுக்கொணு மனோவேதனையை யுண்டாக்கிவிட்டது.

மறுநாட் காலை நகரத்தைச் சார்ந்த வெளியிடத்தில் நடுமையத்தில் விசாலமான இடம் விட்டுச் சுற்றுப்பக்கங்கள் எங்கும் பந்தல் போடப்பட்டுப் படிப்படியாய் ஆசனங்கள மைக்கப்பட்டிருந்தன. எங்கும் கண்களைக்கவரும் வண்ணம் அலங்காரம் செய்யப்பட் டிருந்தது. ஒரு புறம் ஓர் மேடை யமைக்கப்பட்டு அதன்மேல் பொற்சரிகைகளால் சித்திரிக்கப்பட்ட பட்டு முதலியவற்றால் பந்தலிடப்பட்டு அங்கு ஒருவித சிம்மாதனமும் அதைச் சூழ வேறு பல உயர்தர ஆசனங்களும் அமைக்கப்பட்டிருந்தன. பலகாரக் கடைகளும், ஹோட்டல்களும் நிறைந்திருப்பதை நோக்க அந்தவிடம் எங்கிருந்தோ அங்குவந்து இறங்கியதுபோ லிருந்தது.

காலையிலிருந்து ஜனங்கள் வந்து அங்கு கும்பு கூடத் தொடங்கினார்கள். யாவரும் பிரகாசமான ஆடையாபரணங்களை யணிந்துகொண்டு ஆண்பெண் சிறியோர் பெரி

186492

யோர் என்றபேதமின்றி அவ்வெளியில் நிறைந்துவிட்டார்கள். சுமார் எட்டரை மணிக்கு இராணி தன் பரிவாரங்களோடு வந்து சேர்ந்தாள். பந்தல்களின் கீழ் அமைக்கப்பட்ட ஆசனங்களில் பிரபுக்களும் சீமான்களும் செல்வவந்தர்களாகிய வர்த்தகர்களும் அவர்கள் குடும்பத்தார்களும் உட்கார்ந் திருந்தார்கள். இராணியோடு காரியதரிசி, டாக்டர் தங்கவேலுப்பிள்ளை, பத்மநாயகி, சித்ராங்கி, புண்யகோடிப்பிரபு இவர்களும் இன்னும் இராஜாங்க உத்தியோகத்தில் உயர்ந்த அந்தஸ்திலுள்ள சிலரும் இருந்தார்கள்.

மணி ஒன்ப தடிக்கப்போகும் சமயம் இராகவன் வடக்கிலுள்ள வழியாய் உள்ளே வந்தான். அவன் தேக முழுதும் கவசமணிந்துகொண்டு முகமூடியைத் திறந்துகொண்டு ஒரு பெரிய பலம் பொருந்திய புரவியின்மேலேறிக்கொண் டிருந்தான். அவன் பின்னால் இரண்டு ஆட்கள் நாணயமான உடையணிந்து ஒருவன் இராகவனுடைய ஈட்டியையும் மற்றவன் ஒரு தலையணியையும் கரத்திலேந்திக்கொண்டு வந்தார்கள். இராகவனைக் கண்டதே ஜனங்கள் கரகோஷம் செய்தார்கள். அவன் அங்கு ஆசனங்க ளமைக்கப்பட்டிருக்கு மிடங்களின் ஓரமாகவே இடையிலுள்ள வெளியிடத்தைச் சுற்றிக்கொண்டு இராணியிருக்கும் மேடைமுன் சென்று நின்று வணக்கம் செய்துவிட்டுத் திரும்பி யுத்தம்செய்ய விடப்பட்டிருக்கும் இடத்தின் மத்தியில் சென்று நின்றான். உடனே பறைகள் முழங்கினதும் குதிரைமேல் இருந்த ஒருவன் யாவரையும் நோக்கி "ஏற்பாட்டின்படி இராகவப் பிரபு இராணியின் மேல் குற்றங்கூறும் எவரோடும் யுத்தம்செய்ய ஆயத்தமாயிருக்கிறார் என்பதைப் பகிரங்கமாய்த் தெரிவிக்கிறேன். அவ்வாறு குற்றங் கூறுவோர் வீராயின் வெளிவரலாகும்" என்று மூன்று முறை கூவினன்.

17 SEP 1923

இரண்டு மூன்று நிமிடங்கள் எங்கும் நிச்சந்தடியாக விருந்தது. அடுத்த நிமிடம் படபட வென்று குதிரைகள் வரும் காலடிச்சத்தம் கேட்டதும், தென்புறம் வகுக்கப் பட்டிருந்த வாயிற்படியின் வழியாய் ஐந்துபேர் புரவிக ளின்மே லேறிக்கொண்டு உள்ளே வந்தார்கள். அவர் களில் முன்னே இருந்தவன் பூரணமாகக் கவசமணிந்திருந் தான். பின்னா லிருந்தவர்கள் ஈட்டி, கண்டகோடரி முத லிய அவன் ஆயுதங்களை யேந்திக்கொண் டிருந்தார்கள். அவர்கள் மையஸ்தானத்தில் வந்ததும் முன்னே இருப்ப வன் தன் கவசத்தின் முகமூடியைத் திறந்தான். உடனே எங்கும் ஜனங்க ளாரவாரிக்கும் சத்தம் கிளம்பியது. ஏனெ னில் அங்குவந்துநின்றவன் துஷ்டகேது இராஜகுமாரனே. மற்ற நால்வரும் அவனுடைய ஆட்கள்.

துஷ்டகேது அங்குபடிகளின்மேல் காலூன்றி நின்று "ஓ! நயனபுரி வாசிகளே! நீங்கள் இராணியாகக்கருதும் அம்மாது தன் கெட்ட நடக்கைகளால் சிம்மாதனத்தில் அமர்ந்திருக்கும் உரிமையை இழந்து விட்டாளென்பதை நிரூபிக்கவும், இராகவப் பிரபு வென்பவன் பன்முறை யென்னை அவதூறாய்ப் பேசியதற்காக அவனைத் தண்டிக் கவும் நான் ஆயத்தமாக வந்திருக்கிறேன் என்பதைப் பகிரங்கமாய் அறிவிக்கிறேன்" என்று கெட்டியாய்க் கூறினான்.

உடனே பறைகள்முழங்கின. ஜனக்கூட்டத்தில் நிச்சந்தடி யுண்டாயிற்று. துஷ்டகேது உடனே அங்கிருந்து தெற்குக்கோடியில் சென்று நின்று தன்கவசத்தின் முக மூடியை மூடிக்கொண்டான். அவன் ஆட்களில் ஒருவன் அவனுடைய பெரிய ஈட்டியை யவன்கையி லளித்தான்.

அதேகாலத்தில் இராகவன் வடகோடியில் துஷ்ட கேது நிற்குமிடத்திற்கு நேராய் நின்று தன் முகமூடியை

மூடிக்கொண்டு கையில் ஈட்டியை யேந்திநின்றான். மறு நிமிடம் பறைகள் அறையப்பட்டன. அப்போது யுத்தத் திற்கு ஆயத்தமா யிருக்கும் இரண்டு வீரர்களும் தங்கள் தங்கள் கவசம் ஆயுதம் முதலியவை சரியாக விருக்கின்ற னவாவென்று பார்த்துக்கொண்டார்கள். மறுமுறை இரண் டாவதாகப் பறையறையத் தொடங்கியதும் வீரர்கள் இரு வரும் ஒருவர்மே லொருவர் பாய்வதற்காகத் தங்கள் ஈட்டிகளை யுறுதியாக வலக்கரங்களில் பற்றி முன்னுக்கு நீட்டிக்கொண்டு இடது கரங்களிற் கேடையங்களைப் பற் றிக்கொண்டு தங்கள் முகம் குதிரைகளின் பிடரிகளில் படும்படி முன்னோக்கிக் குனிந்து கொண்டார்கள்.

நேயர்களே! அச்சமயம் இராணியின் முகம் அதிக மாய் வெளுத்து விட்டது. துஷ்டகேது வந்தது முதல் அவள் மனதில் ஒருவிதப் பீதியுண்டாகி விட்டது. தன் காதலனாகிய இராகவன் தோல்வியடைந்து விட்டால் தனக்காக வேறு யாரேனும் வந்து யுத்தம்புரிந்து ஜெய மடையவேண்டும். இன்றேல் ஜனங்கள் கோபங்கொண் டால் தன்னைப் பஞ்சுபோல் சிதைத்து விடுவார்க ளென்ற பயம் ஒருபக்கம், அதன்றி இராகவனுக்கு ஒரு சமயம் பிராணாபத்தே நேர்ந்து விடுமோ என்றதிகில் ஒருபக்கம். ஆயினும் வெளிக்கு ஒன்றும் காட்டாமல் அதிகாரக் குறி யுடைய முகத்தோடேயே நோக்கிக்கொண் டிருந்தாள்.

அதற்குள் மூன்றாமுறை இருவரும் யுத்தம்தொடங்க வேண்டும் என்பத னறிகுறியாகப் பறைகள் முழங்கின. அச்சமயம் இரண்டு வீரர்களும் இராணியின் ஆசனத் திற்கு நேராயுள்ள மையஸ்தானத்திற்கு இருபுறங்களிலும் சுமார் முந்நூறு கஜதூரத்தில் நிற்கிறார்கள். மூன்றாமுறை பறையறைந்ததும் இருவரும் தங்கள் குதிரைகளைத் தட்டி வாயுவேகம் மனோவேகம் என்னும்படி ஒருவரை நோக்கி

யொருவர் நேராக விட்டார்கள். அப்புரவிகளும் நடக்கும் விஷயங்களை யுணர்ந்து உரோஷத்தோடு ஒவ்வொன்றும் தன் எதிரியைத் திரணமாய் மதிப்பதுபோல் சற்றும் பயமென்பதின்றி வயிறு பூமியிற் படும்படி பாய்ந்துசென்றன. அந்த இரண்டொரு நிமிடங்கள் ஜனங்களின் தேகங்களில் இரத்தவோட்டமே நின்று விட்டதெனக் கூறலாம். யாவரும் சித்திரப் பதுமைகள்போல் அசையாமல் திறந்தவாய் திறந்தபடி இமை கொட்டாமல் இரண்டு வீரர்களும் ஒருவர்மேல் ஒருவர் வீழ்ந்து தாக்கும் சமயத்தை யெதிர் பார்த்தபடி நின்றூர்கள்.

குதிரைகளிரண்டும் மையஸ்தானத்தில் ஒன்றின்மேலொன்று மோதிக் கொண்டபோது இவற்றின் கவசங்கள் மோதிக்கொண்டதனுல் உண்டான சத்தம் பேரிடிக்குச் சமதையாயிருந்தது. இரண்டு புரவிகளும் இரண்டொரு விஞடிகள் பின்னுக் கிடைவதுபோல் தத்தளித்தன. வீரர்களுடைய ஈட்டிகள் ஒருவர் ஈட்டி ஒருவர் கேடையத்தில் தாக்கியதால் துண்டு துண்டுகளாக உடைந்து மேலே பறந்தன. மறுவிஞடி இமைகொட்டு முன் இருவரும் தங்கள் வாளாயுதங்களை யுருவிக்கொண்டு ஒருவரையொருவர் தூஷித்துக் கொண்டும் அலட்சியமாய்க் கூறிக்கொண்டும் யுத்தம்செய்யத் தொடங்கிஞர்கள்.

இருவரும் வாட்போரில் வல்லவர்களானதால் யார் வெல்வார்களென்று முன்ஞடியே தீர்மானம் செய்யவாவது நம்பிக்கொள்ளவாவது முடியவில்லை. இருகட்சியைச் சேர்ந்த ஜனங்களுக்கும் ஒரு விஞடி நம்பிக்கையும் சந்தோஷமும் மறுவிஞடி திகிலும் துயரமுமாக மாறிமாறி யுண்டாயின. ஏனெனில் யுத்தம் செய்வோர்களுடைய நிலைமை அவ்வாறு மாறிக்கொண்டிருக்கிறது. இந்தவிஞடி ஆச்சு துஷ்டகேது மல்லாந்து விழப்போகிறுன் போல்

காண்கிறது. ஆனல் மறுவினடியே இராகவன் அவன் வாளால் வெட்டுண்பான் போல் தோன்றுகிறது. இவ்வாறு இருவரும் சுமார் கால்மணிநேரம் யுத்தம் செய்த போது இராகவன் கைவாள் திடீலென்று நழுவிவிட்டது. அதைக்கண்டதே துஷ்டகேது தன் வாளை யோங்கிக்கொண்டு வீசினன். அந்த வினடி இராகவன் போய்விட்டானென்றே யாவரும் கருதினர்கள். இராணியின் ஆவி சோர்ந்துவிட்டது.

ஆனல் அவனுடைய குதிரை சமிக்கைப்படி சட்டென்று இரண்டடி விலகிவிட்டதால் துஷ்டகேதுவின் வாளுக்கு அவன் தப்பித்துக் கொண்டதோடு இமை கொட்டுமுன் தன் கண்டகோடரியை யெடுத்துக்கொண்டு துஷ்டகேது மறுபடி தன் கத்தியை யோங்குவதற்குள் பாய்ந்து பலங்கொண்டமட்டும் ஓங்கி அவன் சிரசின்மேலடித்தான். அதனல் துஷ்டகேது இரண்டொரு வினடி கரத்தைத் தூக்கமுடியாமல் தயக்கமடைய நேர்ந்தது. இராகவன் சமயமறிந்து மறுபடியுடனே இன்னொரு அடி கோடரியா லடித்ததும் துஷ்டகேது மலைவிழுந்ததுபோல் சாய்ந்து குதிரையினின்றும் பூமியில் விழுந்தான்.

உடனே எங்கும் பெரிய சந்தோஷ கோஷ்டங்கிளம்பியது. இராகவன் உடனே தன் குதிரையினின் றிழிந்ததும் விழுந்துவிட்ட எதிரியின் மார்மேல் காலைவைத்து ஆசாரப்படி தன் கத்தியைத் தலைக்குமேல் மும்முறை சுழற்றிவிட்டுத் தோல்வியடைந்த எதிரியின் சிரசணியிலிருந்த இரகுகளி லொன்றைப் பறித்துத் தன் ஈட்டியின் நுனியில் சொருகிக்கொண்டு குதிரையேறி அந்த வட்டாரத்தை மும்முறைசுற்றிக் கடைசியில் இராணிமுன்சென்று நின்று வணங்கி ஈட்டியைநீட்டினன். வழக்கப்படி இராணி அவ்வீட்டிமுனையிலிருந்த இறகை யெடுத்துக்கொண்டாள்.

அச்சமயம் இராணியின் முகத்தில் உண்டான சந்தோஷப் பிரகாசம் அன்பு நிறைந்ததா யிருந்தது. ஜனங்க ளெல்லாரும் ஆரவாரித்துக் கோஷ்ட மிட்டார்கள். இராணியின் அருகிலிருந்த யாவருமே சந்தோஷமாய் ஆரவாரித்தார்கள். பத்மநாயகிக்கு அச்சமயம் ஆதிகாலத்தில் டாக்டர் தங்கவேலுப்பிள்ளை தன்னைநோக்கி "பத்மநாயகி! நீ உயர்ந்த அந்தஸ்திற்கும் செல்வம் பொருந்திய நிலைமைக்கும் வரவேண்டு மாயின் இந்த அற்பவாஞ்சைகளை யெல்லாம் அடியோடொழித்து விடவேண்டும். உன்கணவன் பிரிந்து போவதே நல்லது. நீ எப்படியும் ஒரு சீமாட்டியாவாய். அதுமட்டுமல்ல; இராகவன் பிரபுப்பட்டம் பெற்றுச் சீமானுவதோடு இராணியின் கணவனுகி அவள் பக்கத்தில் அரசனுகச் சிம்மாதனத்தில் அமரலாகும். அதைவிட அசாத்திய மெனக் கருதப்பட்ட விஷயங்க ளெல்லாம் உலகில் நடந்தேறி யிருக்கின்றன" என்று கூறியது அவள் நினைவிற்கு வந்ததும், அவள் மனதில் ஆனந்தத்தை யுண்டாக்கிவிட்டது. அங்கிருந்த யாவரும் இராகவன் ஜெயமடைந்ததற்காக அவனைப் புகழ்ந்தார்கள். ஆயினும் பிரபு வமிசத்தார்மட்டும் அவனை யலக்ஷியமாகவே நோக்கினுர்கள். மேடைமே லிருந்தவர்களில் புண்ணியகோடிப்பிரபு ஒருவனுக்கு மட்டும் இராகவன் அடைந்த வெற்றியும் புகழ்ச்சியும் சந்தோஷத்திற்குப் பதில் மன எரிச்சலையே யுண்டாக்கின. அந்தோ! பொறுமைக்கு இடந்தந்தோர் யாவரே சந்தோஷத்தை யனுபவிப்பர்? மேடைமே லிருந்த அனைவரும் இராணியையே நோக்கிக்கொண்டிருந்தார்கள்.

அச்சமயம் பூபாலன் அரசியிருக்கும் மேடைக்கு வந்து மெதுவாய் டாக்டர் தங்கவேலுப்பிள்ளையி னருகில் சென்று பேசாம லிருக்கும்படிச் சாடைகாட்டிவிட்டு

அவர்கரத்தில் ஒரு கடிதம் கொடுத்துவிட்டுச் சட்டென்று திரும்பிப்போய் விட்டான். தங்கவேலுப்பிள்ளை அக்கடிதத்தைப் பிரித்து வாசித்துப் பார்த்தார். அதிற் கீழ்க் கண்டபடி எழுதியிருந்தது:

“நான் இரண்டு நாட்களாகத் தங்களைக் காண வேண்டுமென்று என்னாலானவரை முயன்றும் வர முடியவில்லை. இப்போதும் எங்கள் ஆட்களில் அனேகர் இங்கு வந்திருக்கிறார்கள். ஆகையால் நான் தங்களிடம் நின்று பேசலாகாது. ஒரு விசேஷசங்கதி நான் தங்களிடம் கூற வேண்டியதாக விருந்தது. அதற்காகவே யிக்கடிதத்தை யெழுதிக் கொண்டுவந்தேன். அச்சங்கதியாவது மூன்றுவதுநாள் ஒரு ஆள் இராகவப் பிரபுவோடு யுத்தம் புரிய வருவான் என்பதே”

இக்கடிதத்தை டாக்டரிடம் அளித்துவிட்டதும் பூபாலன் ஒரு வினாடிகூட நிற்காமல் போய்விட்டான். டாக்டர் தங்கவேலுப்பிள்ளை யக்கடிதத்தை வாசித்துப் பார்த்ததும் அவர் முகத்தில் ஒருவித இருளுண்டாயிற்று; மனதிலும் பயமுதித்தது. இரண்டொரு வினாடி சிந்தித்து “ஒருவன்-அந்த ஒருவன் மாயசிங்கனாகவே யிருக்கவேண்டும்” என்று தனக்குத்தானே கூறிக்கொண்டார். ஆனால் அச்சமயம் மனதிலுண்டாயிருந்த குழப்பத்தால் தன்னை மறந்து வாய்விட்டே யவ்வாறு கூறிவிட்டார். உடனே “அடடா என்ன முட்டாள்தனம் செய்து விட்டோம். நாம் கூறியதை யாருக்கேனும் கேட்டுவிட் டிருக்குமோ” வென்று திடுக்கிட்டு நாற்புறங்களிலும் நோக்கினார். யாவரும் இராணியிடமே நாட்டம் வைத்திருப்பதைக் கண்டார். மேலும் தன் சமீபத்தில் ஒருவருமில்லை. பின்பக்கம் சித்திராங்கிமட்டு மிருக்கிறாள். அவளும் இராகவனையே ஆவலோடு நோக்கிக்கொண் டிருக்கிறாள். ஆகையால் நாம்

கூறியதை யொருவரும் கேட்கவில்லை யென்று திருப்தி யடைந்தார்.

அந்தச் சங்கதியைப்பற்றி அரண்மனையி லுள்ளவர்களுக்கு—இராகவனுக்குக் கூட—அறிவிக்க லாகாதென்று தீர்மானித்துக் கொண்டார். ஏனெனில் "பீதியை யுண்டாக்கத்தக்க விஷயத்தைப்பற்றி முன்னுடி யுணருதல் தீமையை யுண்டாக்கும். இராகவன் ஜெயமடைந்ததால் உற்சாகங் கொண்டிருக்கிறான். தன்னோடு யுத்தம் செய்கிறவன் இன்னனென்று அறியாதிருந்தால் தைரியத்தோடேயே யுத்தம்செய்வான். அப்படிக்கின்றிப் பெயரைக் கேட்டதே யாவரும் நடுக்கங்கொள்ளும் பிரக்யாதி வாய்ந்த சூரனுகிய மாயசிங்கனே நம்மோடு சண்டைக்குவருகிறான் என்பதை யறிந்தால் இராகவனுக்கு மனங்கலங்கித் தைரியங் குன்றிவிடும்'' என்று இவ்வாறு டாக்டர் தனக்குள் சிந்தித்துக்கொண்டே ஒருவர்க்கும் அதைப்பற்றிக் கூறலாகாதென்று தீர்மானித்து விட்டார்.

இராகவன் மாயசிங்கனைச் சண்டைக்கு வலிக்கவே இந்த மூன்று நாள் சண்டை யேற்பாட்டை யுண்டாக்கினனென்பதும் அவன் நேரிலேயே மாயசிங்கனைப் போருக்கழைத்திருக்கிற னென்பதும் டாக்டருக்காவது மற்ற பேருக்காவது தெரியாது. சித்ராங்கி தான் கூறியதைக் கவனிக்கவில்லை யென்றே டாக்டர் நம்பிக்கொண்டார் என்று கூறினேமல்லவா உண்மையப்படியில்லை.

பூபாலன் டாக்டரிடம்வந்து இரகசியமாய்ச் சமிக்கை செய்தபோது அவள் தற்செயலாய்ப்பார்த்தாள். ஆகையால் ஜாடையாகவே கவனித்திருந்தாள். பிறகு வாலிபன் டாக்டரிடம் கடிதம் கொடுத்ததைப் பார்த்தாள். டாக்டர் அதை வாசிக்கும்போது பின்னுலிருந்து எட்டிப் பார்த்து அக்கடிதத்திற் கண்டிருந்த ஒவ்வொருவார்த்தை

யையும் விடாமல் பார்த்துக் கொண்டதோடு டாக்டர் கூறிய "அந்த ஒருவன் மாயசிங்கனே" என்ற வார்த்தைகளையும் காதாரக் கேட்டாள்.

இராணியிடம் இறகையளித்த பின் இராகவன் மறுபடி யுத்தம் செய்யும் இடத்தில் போய் நின்ருன். மறுபடி பறை யறையப்பட்டது. ஆனல் ஒருவரும் யுத்தத்திற்கு வரவில்லை. மாலைப்போது குறித்த நான்கு மணிவரையில் இராகவனேடு யுத்தம் செய்ய வேறெருவரும் வராததால் இராணி முதலியவர்கள் மாளிகைக்குப் புறப்பட்டார்கள். துஷ்டகேது கீழேவிழுந்ததே அதற்கென்று அங்கு ஆயத்தமாக விருந்த டாக்டர் அவனைப் பார்வையிட்டு "அவனுக்கு ஆபத்தான காயம் படவில்லை. மூர்ச்சையடைந்திருக்கிருன்" என்று கூறியதும், அவனுடை ஆட்கள் அவனை யவன் மாளிகைக்குக் கொண்டுபோய் விட்டார்கள். அரண்மனையிலிருந்து ஏராளமான தின்பண்டங்களும் குடிவகைகளும் அந்த வெளிப்பிரதேசத்திற்குக் கொண்டு வரப்பட்டன. அங்கு வந்திருந்த ஏழைகளுக்கெல்லாம் இராணியின் ஆட்கள் தாராளமாய்ப் பணம் அளித்தார்கள். பிரபுக்களெல்லாம் தத்தம் மாளிகைகளுக் கேகினர்கள். மற்ற பாமரஜனங்களனைவரும் இரவு நெடுநேரமட்டும் விருந்துண்டு கேளிக்கையாகக் காலங் கழித்தார்கள்.

அன்றிரவு அரண்மனையில் விசேஷமான விருந்து நடந்தது. இராணி, இராகவன், சித்ராங்கி, புண்ணிய கோடிப்பிரபு, டாக்டர் தங்கவேலுப்பிள்ளை, பத்மநாயகி, இவர்களும் இன்னும் சில சீமாட்டிகளும் ஒருபெரியகூடத்தில் உட்கார்ந்தார்கள். விலையுயர்ந்த அறுசுவை யுண்டிகளும், பலவித உயர்தரக் குடிவகைகளும், பழவகைகளும் ஏராளமாய் மேஜைகளின்மேல் வட்டிக்கப்பட்டன. இரா

கவன் யாவராலும் புகழப்பட்டான். இராணி யவன்மேல் மிக்க விசுவாசங்காட்டி நடந்துகொண்டாள். சித்ராங்கி கூட அடிக்கடி அவனிடத்திலேயே கேளிக்கையாய்ச் சம்பாஷித்துக்கொண் டிருந்தாள்.

அந்தோ! பொறாமை யென்னும் பேய் கொடிய வல்லமையுடைய இராக்ஷசப் பேய். அது யோக்கியனை அயோக்கியனாகவும், கருணை யுடையவனைக் கன்மன முடையவனாகவும், பெருந்தன்மை வாய்ந்த குணசாலியை அற்பமதி யுடையவனாகவும் செய்துவிட வல்லது. அத்தகைய பொறாமையால் நமது புண்ணியகோடிப் பிரபு இச்சமயம் பீடிக்கப்பட் டிருந்தான். அவன் அமரநாதன் கொலையில் மிக்க நெருக்கமாகச் சம்பந்தப்பட் டிருந்ததால், அது முதல் அவன் கம்பீரமும் பெருந்தன்மையும் மங்கிவிட்டன. அதோடு இராகவன் அன்று தன்மேல் பொறாமை யுடையவ னென்று காட்டிக் கொண்டது முதல், அவன்மேல் இவனுக்குக் கொடிய பொறாமையுண் டாய்விட்டது. அவனுக்கு அரசியிடம் இருக்கும் செல்வாக்கும் நட்பும், இப்போது யாவரும் அவனை யொரு ஜெயவீரனைக் கொண்டாடிப் புகழ்வதும், இனி இராணி யிவன்மேல் அதிக அன்பு காட்டுவாள் என்ற யோசனையும் இவன் மனதைப் புழுக்கள் போன்று அரித்தன. "நாம் என்ன இவனிலும் அழகில் குறைந்தவனா. நாம் குடிப்பிறப்பிலும், பூர்வ கௌரவத்திலும், செல்வத்திலும் இவனைவிட எவ்வளவோ உயர்வாயிருக்கிறோம். அப்படியிருக்க இவனா இராணியின் காதலுக்குரியவன். இவன் அந்த விஷயத்தில் ஜெயமடையும்படி நாம் விட்டுவிடுவதா" என்பது அவனுடைய சிந்தனை.

"மேலும் அன்று நடந்த விவகாரத்தில் இராகவன் துஷ்டகேதுவைச் செயித்ததால் ஜனங்களால் கூடக்

கொண்டாடப் பட்டான். இதனால் இராணியவன்மேல் இன்னுமதிக விருப்பம்கொள்வாள். போகப்போக ஜனங்கள் இவனை யரசனாக வேற்றுக் கொள்ளக்கூட மனமொத்து விடுவார்கள்போல் காண்கிறது. இன்னும் இரண்டு நாட்களில் வேறுயார் இவனோடு சண்டையிட வரப் போகிறார்கள். வரத்தக்கவர்கள் யாராவது இருப்பதாய்த் தெரியவில்லை. அப்படியாயின் இந்த ஒருயுத்தத்தில் ஜெயமடைந்ததாலேயே இவன் அரசபதவியை யடைந்து விடுவதை நாம் பேசாமல் கோழைபோல் பார்த்துக்கொண்டிருப்பதா? நமக்கு ஒருமுறை முயற்சிசெய்ய வாவது சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. எப்படியாயினும் சரி இந்தச் செம்படவப்பயல் அரசனாகும்படி நாம் விட்டுவிடக்கூடாது" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டான்.

அவன் மனம் பெரிய நரகவேதனை பட்டுக்கொண்டிருந்தது. ஆயினும் எவ்வளவோ கஷ்டத்தோடு யாவும் அடக்கிக்கொண்டிருந்தான். ஆயினும் அங்கிருந்தவர்களில் இருவர் மட்டும் அவன் மனதிலிருந்ததை யறிந்து கொண்டார்கள். அவர்கள் டாக்டர் தங்கவேலுப்பிள்ளையும் சித்திராங்கியுமே. டாக்டர் எப்படிப்பட்டவர்களுடைய உள்ளத்தில் ஆழத்திலிருக்கும் எண்ணங்களையும் அறிந்துகொள்ளும் சக்தி வாய்ந்தவன். சித்ராங்கி தனக்குள் செய்துகொண்டிருக்கும் ஆலோசனையின் சிந்தனையால் புண்ணியகோடியின் மனதிலிருப்பதைச் சுலபமாக வறிந்துகொண்டாள். இரவு பத்துமணியாயிற்று. யாவரும் மதுபானஞ் செய்யத்தொடங்கிவிட்டதால் மிக்க கேளிக்கையோடு சம்பாஷித்துக் கொண்டிருக்கிறார்கள்.

33 - வது அத்தியாயம்.

புண்ணியகோடிக்கும் சித்திராங்கிக்கும் நடக்கும் சம்பாஷணையும் அவர்கள் ஒப்பந்தங்களும்— 2-வது நாள் யுத்தம்—குமரசிங்கம் பிரபு இராகவனோடு யுத்தம் செய்தல்—இராகவனே இன்றும் ஜெயமடைகிறான்- அன்றிரவு விருந்தில் சித்திராங்கி செய்யும் சூழ்ச்சி— 3-ம் நாள் யுத்தம்.

அச்சமயத்தில் சித்திராங்கி புண்ணியகோடியை மெதுவாய்ச் சீண்டி இரகசியமாய், "நான் ஆயுத சாலைக்குச் சென்றிருக்கிறேன். நீ மெதுவாய் ஒருவரு மறியாவண்ணம் அங்குவந்துவிடு. நாம் அவசியம் பேச வேண்டிய ஒரு முக்கிய விஷயம் இருக்கிறது" என்று கூறி விட்டு மெதுவாய் எழுந்துபோய்விட்டாள். "அவள் எதற்காக நம்மை அங்கு வரச்சொன்னாள்? என்ன சங்கதி யைப்பற்றிப் பேசப்போகிறாள்?'' என்று புண்ணியகோடி தன்னாலானமட்டும் சிந்தித்துப் பார்த்தும் அவன் மன திற்கு ஒன்றும் புலப்படவேயில்லை. ஆயினும் அவள் கூறியபடி சுமார் கால் மணி நேரங்கழித்துச் சாளரத்தி னருகிற்சென்று என்னமோ பார்ப்பவன்போல அபிநயம் செய்துகொண்டிருந்து மெதுவாய் அங்கிருந்து நழுவிவிட்டு ஆயுதசாலைக்குச் சென்றான்.

சித்திராங்கி புன்னகையோடு அவனை நோக்கி "இன்று உன் மனதிலிருக்கும் இரகசியத்தை நான் அறிந்துகொண்டேன்'' என்றாள். அவன் திடுக்கிட்டு "என்ன? என் மனதிலா?'' என்றான். சித்ராங்கி "ஆம் என்னிடம் ஒளிக்கவேண்டாம். என்னிடம் மனம் விட்டுக்கூறினால் நான் உனக்கு அவ்விஷயத்தில் உதவியே செய்வேன்.

உன் மனதில் ஒரு பெரிய ஆசையிருக்கிறது. அவ்வாறே என் மனதிலுமொன்றிருக்கிறது'' என்றாள். புண்ணிய கோடி "என் மனதில் பேராசையா?'' என்றான். சித்தி ராங்கி "ஆம். இராகவன்மேல் இராணி காதல்கொண் டிருப்பதற்காக உனக்கு அவன்மேல் பொறாமையுண்டாகி யிருக்கிறது. இராணியின் காதலைப்பெற வேண்டுமென் றும் அவளோடு சிம்மாதனத்தி லுட்காரவேண்டு மென் றும் உனக்கு ஆவலிருக்கிறது'' என்றாள்.

புண்ணியகோடி "உனக்கு என்ன ஆசை யிருக்கி றது?'' என்றான். சித்ராங்கி சற்றும் தடுமாற்றமின்றி "எனக்கு இராகவப் பிரபுவின்மேல் காதலுண்டாகி யிருக் கிறது'' என்றாள்.

இதைக்கேட்டதே புண்ணியகோடிப் பிரபு திடுக் கிட்டு பிரமித்துக் கோபமடைந்து சற்று நேரம் சிந்தித்து அவளை யுற்றுநோக்கி "உண்மையாகவா கூறுகிறாய்?'' என்றான். அவள் "ஆம். எனக்கென்னவோ அது ஒரு அற்ப ஆசையோ என்னமோ தெரியவில்லை. அவன் எனக்கு வணங்கும்படி செய்யவேண்டுமென்ற பெரிய அவாவுண்டாயிருக்கிறது'' என்றாள். புண்ணியகோடி "ஆகா! அந்தச் செம்படவப் பயல் எதிலும் எனக்குப் போட்டியாய் வந்து சேர்கிறான்'' என்று கோபத்தோடு கூறினன்.

சித்திராங்கி "ஆ! இப்போது நான் கூறியதை நீயே ஒப்புக்கொண்டாய். நான் இராவகனை எனக்கு இணங்கச் செய்து கொள்வதால் உன் நோக்கத்திற்கும் அனுகூலம் உண்டாகும். எப்படியெனில் இராணி அவன்மேல் வெறுப்படைவாள்'' என்றாள்.

புண்ணியகோடிப் பிரபு "அப்படியாயின் நீ கூறுகிற யாவும் அப்படியே நடக்கிற சங்கதிகள்தானா?'' என்றான்.

சித்திராங்கி "ஆம், உண்மையாக நடக்கிறவைகளே. நீ என் மேல் கோபிக்கலாகாது. அப்படிக் கோபிக்கச் சற்றும் நியாயமில்லே. ஏனெனில் நீ மட்டும் என்னிடம் சத்திய மாக நடந்துகொள்ளவில்லே. அப்படி உனக்கு என்மே லுள்ள காதல் உறுதியானதாயின் நீ இராணியின் கணவ னுகை விருப்பங் கொள்வாயோ?" என்ருள்.

புண்ணியகோடிப்பிரபு "சித்ராங்கி! இருக்கட்டும். இப்போது நமக்குள் காதலேப்பற்றிய சம்பாஷணேயே வேண்டாம். நாம் இருவரும் நட்பாகவே யிருப்போம். ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்வோம். ஆனல் ஒருவருக்கொருவர் நம்பிக்கை யிருக்கவேண்டும். ஆகை யால் நான் உண்மையைக் கூறுகிறேன். நீ என் கோரிக்கை யைப்பற்றிக் கூறிய யாவும் உண்மையே." என்றதே, சித் ராங்கி "நீ இன்று பூரண கவசமணிந்து வந்தது ஏன் தெரி யுமா? இராகவன் தோல்வி யடைந்தால் உடனே நாம் இராணியின் நிரபராதத்தன்மையை நிரூபிப்பதாய் எதிரி யோடு சண்டையிட்டுச் செயித்து இராணியின் தயவைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதற்கே" என்ருள்.

புண்ணியகோடி "ஆ! நீ மிக்க சூக்கும அறிவுடைய வள்" என்ருன். சித்ராங்கி "அதையறிய அவ்வளவு சாமார் த்தியம் வேண்டியதில்லே. இப்போது நான் அத்தகைய சந் தர்ப்பம் வாய்க்கும்படி செய்து அதனல் நீ எதிரியைச் செயித்து பிரபுக்களனைவருடைய புகழ்ச்சிக்கு முரியனுகி இராணியின் காதலனுகும்படி செய்வதானலோ?" என் ருள். புண்ணியகோடி "நீ யவ்வளவு மட்டும் செய்வதா யின் நீ யொரு தேவ கன்னிகை யென்றே மதிப்பேன்" என்ருன்.

சித்திராங்கி:—"அப்படியானல் ஒரு சங்கதி கூறுகிறேன். அதை மிக்க இரகசியமாக வைத்துக்கொள். அதா

வது மூன்றாவது நாள் மாயசிங்கனே யுத்தம் செய்ய வரப்போகிறான்'' என்றாள்.

புண்ணியகோடிப்பிரபு இதைக் கேட்டதே மிக்க வியப்படைந்து "மாயசிங்கனா? என்ன ஆச்சரியம். அவன் இராணிக்கு ஆபத்து வந்தால் அப்போது உதவி செய்வ தாக வாக்களித்தானே?'' என்றான்.

சித்ராங்கி "மாயசிங்கனுடைய செய்கைகள், கடவு ளின் செயல்கள் எவ்வளவு மர்மமாகவும் ஆச்சரியமாகவு மிருக்கின்றனவோ, அவ்வளவு வியப்பாகவும் முழுதும் விளங்காதவையாகவுமே யிருக்கின்றன''. என்றாள்.

புண்ணியகோடிப் பிரபு "மாயசிங்கன் வருவது உனக்கெப்படித் தெரியும்?'' என்றான். சித்ராங்கி "எப்ப டியோ தெரியும், அவன்வருவது உண்மை'' என்றாள். பிரபு "இருக்கட்டும், அப்படியே யிருந்தாலும் அதனால் எனக் கெப்படி யனுகூல முண்டாகும்?'' என்றான். சித்ராங்கி "என்ன மட்டிப்புத்தி இன்னம் விளங்கவில்லை, வா! நாம் உலவிக்கொண்டே செல்வோம். யாவும் விவரமாகக் கூறு கிறேன்'' என்றாள். உடனே இருவரும் அங்கிருந்து தோட்டத்தில் பிரவேசித்து உலவிக்கொண்டே இரகசிய மாக நெடுநேரம் பேசினார்கள்.

நேயர்களே! அவர்கள் மிக்க இரகசியமாகப் பேசி னதால் அதை நாம் கூறக்கூடவில்லை. ஆயினும் பின்னால் நடக்கும் அதிசய சம்பவங்களால் அவர்கள் சம்பாஷணை யின்னதென விளங்கும்.

மறு நாள் இரண்டாவது யுத்தநாள். முன்னாள்போ லவே அன்றும் நகரஜனங்கள், சுற்றுப் பக்கங்களிலுள்ள ஜனங்கள், பிரபுக்கள் முதலிய அனைவரும் வந்து கும்பு கூடினார்கள். சரியாக ஒன்பதடிக்கச் சில நிமிடங்களிருக் கையில் இராணி தன் பரிவாரங்களோடு வந்து மேடைமே

லமர்ந்தாள். அன்றும் முன்னுள் போலவே புண்ணிய கோடிப் பிரபு பூரணகவசமணிந்து வந்திருந்தான். ஆனல் அன்று அவன் முகத்தில் சோர்வான குறியில்லை; மனவெரிச்சலும் ஒருவாறு தணிந்திருந்தது. ஒன்பதடித்ததே இராகவன் முன்னுள்போலவே கவசமணிந்து முகமூடியை மட்டும் திறந்து கொண்டு உள்ளே பிரவேசித்ததும் யுத்த அரங்கத்தை மூன்று முறை சுற்றிக்கொண்டு இராணிக்கு வந்தன மளித்துவிட்டு வடக்குக் கோடியில்சென்று நின்று கவசத்தால் முகத்தை மூடிக்கொண்டு கையில் ஈட்டியை யேந்திக்கொண்டு யுத்தத்திற்கு ஆயத்தமானுன்.

உடனே பறைக ளறையப்பட்டன. "யாரேனும் இராணியின்மேல் குற்றம் கூறுகிறவர்க ளிருந்தால் வந்து இராணியின் வீரரைச் செயித்துத் தங்கள் வாக்கியத்தை நிரூபிக்கலாம்" என்று மூன்றுமுறை கூறப்பட்டது. இரண்டொரு நிமிடங்களில் பிரம்மாண்டமான புரவியின் மேலேறிக்கொண்டு மிக்க பலம்பொருந்திய உயர்தரக் கவசமணிந்த ஒரு வீரன் யுத்தபூமிக்குள் நுழைந்து வந்தான். அவன் பின்னல் இரண்டு ஆட்கள் அவனுடைய ஈட்டியையும் கேடையத்தையும் தாங்கிக்கொண்டு வந்தார்கள். அவன் யுத்தபூமியின் மையத்தில் வந்துநின்றதும் முறைப்படி அவன்பெயர்முதலியன கேட்கப்பட்டபோது அவன் "என்பெயர் குமரசிங்கம் பிரபு. நான் நேற்று என் நண்பராகிய துஷ்டகேதுப் பிரபு பயமின்றி யிங்கு யாவர் முன்பும் இராணியைப் பற்றிக் கூறிய மொழிகளை மெய்ப்பிக்கவும் அவர் தோல்வி யடைந்ததற்காக வஞ்சம் தீர்த்துக் கொள்ளவுமே வந்திருக்கிறேன்" என்று உறுதியான மொழிகளாற் கூறினுன்.

உடனே பறைக ளறையப்பட்டதும் வந்த வீரன் தென்கோடியில் சென்று நின்று தன் ஈட்டியைக் கையி

லேந்தி யுத்தத்திற்கு ஆயத்தமானுன். அச்சமயம் இராணிக்கும் பத்மநாயகிக்கும் மனதில் திகிலுண்டாயிற்று. ஏனெனில் குமரசிங்கம்பிரபு மிக்க பலமும் தைரியமும் யுத்தப்பயிற்சியில் தேர்ச்சியும் உடையவன் என்று யாவருக்கும் தெரியும். ஆகையால் இராகவன் எங்கே யிவனுல் தோற்கடிக்கப் படுவானே, என்ன ஆபத்துக் குள்ளாவானே என்று அவர்கட்குப் பீதியுண்டாயிற்று.

மூன்றுமுறை பறையறையப் பட்டதே இரண்டு வீரர்களின் புரவிகளும் ஒன்றை நோக்கி யொன்று பாய்ந்து வந்ததும் இரண்டு வெண்கல மலைகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டனபோல் மோதிக்கொண்டன. அந்த வேகத்தால் பூமியே அதிர்வதுபோ லிருந்தது. இருவர் ஈட்டிகளும் கேடையங்களில் தாக்கிச் சுக்கல் சுக்கலாய்ப் பறந்துவிட்டன. இருவரும் உடனே தங்கள் வாட்களை யெடுத்துக்கொண்டு யுத்தம் செய்யத் தொடங்கினுர்கள். ஆனுல் இருவரில் எவரும் ஏமாறுவதாயில்லை. கத்திச் சண்டையில் இருவரும் சாமார்த்திய முடையவர்களாகவே யிருக்கிறுர்கள். ஆகையால் காண்போர் நேர்த்தியான வாட்போரைக் கண்டு ஆனந்தமும் அதிசயமு மடைந்தார்களே யன்றி வெற்றிதோல்வி ஏற்படுவதாய்த் தோன்றவில்லை. அரைமணி நேரத்திற் கதிகமாகியும் ஒருவரும் இளைக்கவில்லை. ஒருவரும் எதிரிக்குச் சற்றேனும் இடந்தரவில்லை. ஒருதுளி இரத்தங்கூடச் சிந்தப்படவில்லை. ஒருவருடைய கவசத்திலேனும் ஒரு சிறு துவாரங்கூட உண்டாகவில்லை. ஆகையால் ஒரு மனதாக இருவரும் மறுபடி யுத்தபூமியின் கோடிகளில் சென்று நின்று வாட்களை யுறைகளிற் சொருகிக்கொண்டு வேறு ஈட்டிகளைத் தாங்கிக்கொண்டதும் மிக்க துணிகரத்தோடு ஒருவர்மேல் ஒருவர் பாய்ந்தார்கள்.

இம்முறை குமரசிங்கம் பிரபுவின் ஈட்டி சமயத்தில் சற்று சாய்வாய்ப் பிடிக்கப்பட்ட இராகவன் கேடையத்தில் தாக்கியதும் வழுக்கியதுபோல் நழுவிப்போய் விட்டது. ஆனால் இராகவனுடைய ஈட்டியோ குமரசிங்கத்தின் முகக்கவசத்தில் பலத்தோடு தாக்கி எண்ணிறந்த துண்டுகளாக உடைந்து விட்டது. அப்பிரபு அவ்வேகத்தைத் தாங்கமுடியாமல் அடியற்ற மரம்போல் பூமியில் விழுந்துவிட்டார். இராகவன் உடனே குதிரையினின்றும் கீழே குதித்துத் தன் எதிரியின் மார்மேல் ஒரு காலைவைத்துக் கத்தியை மும்முறை சுழற்றி அவன் சிர அணியிலிருந்த இறகுகளி லொன்றைப் பறித்து ஈட்டிமுனையிலேந்தி முறைப்படி யுத்தபூமியை வலம்வந்து அந்த இறகை யிராணியிட மளித்தான்.

அப்போது இராணியின் முகத்தி லுண்டான ஆனந்தப் பிரகாசமும் புன்னகையும் அன்புநிறைந்த கண்ணேக்கமும் கூறக் கூடியனவல்ல. பத்மநாயகியின் மனதிலுண்டான சந்தோஷமும் பூரணமானதே. ஏன்? புண்ணியகோடிப்பிரபு தவிர மற்றயாவரும் மிக்க சந்தோஷமேயடைந்தார்கள்.

கீழே விழுந்துவிட்ட குமரசிங்கம் பிரபுவிடம் அவன் ஆட்களோடி அவனுடைய கவசத்தின் முகமூடியைத் திறந்தபோது அவன் மூக்கினின்றும் மிக்க இரத்தம் வடிவதையும் அவன் சவம்போல் அசைவற்றுக் கிடப்பதையும் கண்டு பயந்தார்கள். ஆனால் வைத்தியர் அதற்குள் வந்து அவன் இருதயத்தையும் நாடி முதலிய வற்றையும் பார்த்து அவன் இறக்கவில்லை யென்றும் மூர்ச்சையடைந்திருக்கிறு னென்றும் கூறினர். அதன்பிறகு அவனுடைய ஆட்கள் அவனை யொரு மஞ்சத்தில் கிடத்தி அவனுடைய மாளிகைக்கு எடுத்துச் சென்றூர்கள்.

இதற்கிடையில் டாக்டர் தங்கவேலுப்பிள்ளை ஜனக் கூட்டத்தில் ஆங்காங்கு கலந்திருந்து ஜனங்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை யறிந்துவந்து தெரிவிக்கும்படி பல வேவு ஆட்களை யனுப்பியிருந்தார். அவர்கள் வந்து கூறிய சங்கதிகளால் ஜனங்களின் கோபந்தணிந்து விட்ட தென்றும், அவர்கள் இராணி நிரபராதியே யென்று நம்பிக்கொண்டார்க ளென்றும் அறிந்து இராணிக்கு அதை யறிவித்தார். அன்று பிறகு எவரும் யுத்தத்திற்கு வரவில்லை. முன்னாள்போலவே ஜனங்களுக்குப் பெரிய விருந்தளிக்கப்பட்டது.

இராணி முதலியவர்கள் அரண்மனைக்குத் திரும்பும்போது ஜனங்களுடைய வாழ்த்தொலி ஆகாயமட்டும் எட்டிய தென்னலாம். இராகவன் புகழப்பட்டதோ அளவேயில்லை. அன்று அரண்மனையில் விருந்து நடக்கும்போது யாவரும் பெரிய ஆனந்தத்தோ டிருந்தார்கள். இராகவனைப்புகழ்ந்து வாழ்த்தாதவர்கள் ஒருவருமில்லை—புண்ணியகோடிப் பிரபு தவிர. இராணி அப்போது அவன்மேல் பகிரங்கமாகவே பூரண அன்புகாட்டி நடந்துகொண்டாள். "மூன்றாவது நாளைக்கு இன்னும் யார் யுத்தத்திற்கு வரப்போகிறார்கள். ஒருவரும் வரத்தக்கவர்களில்லை. ஆதலால் இராணியின் நிரபராதத் தன்மை பூரணமாகவே ருசுப்படுத்தப் பட்டது" என்று யாவரும் நம்பிக்கையோடு கருதினார்கள். சித்ராங்கி, டாக்டர் தங்கவேலுப்பிள்ளை இருவரும் கூட அவ்வாறே அபிநயித்தார்கள்.

ஆனால் டாக்டர் மனதில் மட்டும் உள்ளே பெருங் கலக்கமே. இராகவன் இரண்டுநாள் இருவரைச் செயித்தானாயினும் மூன்றாவது நாளும் அப்படியே ஜெயமடைவானென்று கருத அவர்மனம் இடந்தரவில்லை. ஏனெ

னில் மாயசிங்கன் பிரக்யாதிபெற்ற பலவான்; போர்த் தொழிலில் இணையற்றவன் என்று வெளிப்படையாய் யாவராலும் உணர்ந்திருக்கப்பட்டவன். போர்வீரர்களே அவன் பெயரை நினைத்தாலும் நடுங்குகிறார்கள். எதனுலெனில் பன்முறையவன் ஒருவனே எட்டுப்பேர் பத்துப் பேர் போர்வீரர்களை முதுகுகாட்டி யோடச்செய்து அவர்களிடம் சிக்காமல் ஓடிவிட்டிருக்கிறான். இப்படிப்பட்ட சூரனை வாலிபனாகிய இராகவன் எவ்வாறு வெல்லக்கூடும். இவ்விஷயத்தில் மட்டுமல்ல டாக்டருக்கிருந்த வியாகூலம். தான் புத்திரவாஞ்சையோடு பாதுகாத்துவரும் வாலிபனாகிய வில்வநாதன் மூன்று தினங்கட்கு முன்பு மாயசிங்கனோடு மாளிகையிலிருந்து வெளிப்பட்டவன் இன்னும் வீடுவந்து சேரவில்லை. யாரோ ஒருவன் கொண்டுவந்து வீட்டுக்காரியஸ்தியிட மளித்த கடிதத்தில் தான் இரண்டு மூன்று நாட்கள் கழித்து வீட்டிற்கு வருவதாய் எழுதியிருந்தான். ஆயினும் அவன் எங்கிருக்கிறான் என்னசெய்கிறான் என்பது சற்றும் விளங்கவில்லை யாதலால் டாக்டருக்குப் பெருங் குழப்பமாகவே யிருந்தது.

மாயசிங்கன் இராகவனோடு எதிர்நின்று யுத்தம்செய்யக் கருதியது என்ன கருத்துக்கொண்டோ வென்பது அவருக்குச் சற்றும் விளங்கவில்லை. அதோடு அதுபெரிய வியப்பாக விருந்தது. ஒருசமயம் அவன் மறுபடி தன் கருத்தை மாற்றிவிட்டாலும் மாற்றிவிடலாகும்; அல்லது பூபாலனே மாயசிங்கன் வருவானென்று தவறாக எண்ணிக்கொண் டிருக்கலாகும் என்று இவ்வாறு டாக்டர் தன்மனதை யொருவாறு தேற்றிக் கொண்டு வெளிக்குச் சந்தோஷமுடையவர் போன்றே நடித்தார்.

அன்று இரவு பனிரண்டுமணி வரையில் விருந்தின் கேளிக்கை நடந்துகொண்டே யிருந்தது. அச்சமயம் புண்

ணியகோடியின் முகத்தில் ஒருவிதக் கலவரமான குறி தோன்றியது. அவன் பார்வை சித்ராங்கியின்மேல் மிக்க எச்சரிக்கையோடு நாட்டப்பட்டிருந்தது. விருந்து முடியும் சமயம் நெருங்கியதால் எல்லாருடைய கிண்ணங்களிலும் நிறைய உயர்தரமான திராக்ஷரசபானம் விடப்பட்டது. அச்சமயம் சித்திராங்கி எப்படியோ இராகவன் பக்கத்தில் உட்கார்ந்து அவனிடம் சரசமாகப் பேசிக் கொண்டிருந்தாள். திராக்ஷபானம் கிண்ணங்களில் நிரப்பப்பட்டதே இராணியின் சுகத்திற்காகவென்று யாவரும் தம்தம் கிண்ணங்களை யெடுக்கப்போகும் சமயத்தில் சித்ராங்கி மிக்க ஜாக்கிரதையாகத் தன் கரத்தில் வைத்திருந்த ஒரு சிறு புட்டியிலுள்ள ஏதோ திரவத்தை இராகவன் கிண்ணத்தில் ஊற்றிவிட்டாள். இச்சம்பவத்தைப் புண்ணியகோடிப்பிரபு தவிர வேறொருவரும் காணவில்லை. அதைக் கண்டதே யவன் முகத்தில் சந்தோஷப்பிரகாசம் தோன்றியது. இராகவன் உடனே கிண்ணத்தை யெடுத்து அதிலிருந்தபானம் முழுமையும் அருந்திவிட்டான். யாவரும் இராணியின் சுகத்திற்காக அருந்தியபின் இராணி எழுந்து தன் சயன அறைக்குச் சென்றாள். அதன்பிறகு ஒவ்வொருவராகப் புறப்பட்டார்கள். இராகவனுக்கு மிக்க அதிகமான உறக்கம் தோன்றவே அவன் எழுந்து நேராய்த் தன் படுக்கை யறைக்குச் சென்றான்.

மறுநாட்காலை மூன்றாவதும் கடைசியுமாகிய நாள். அன்று ஏராளமான ஜனங்கள் யுத்த பூமியில் வந்துகூடினார்கள். முன் இரண்டுநாட்கள் வந்ததுபோல அன்றும் ஆத்மநாதம்பிரபு தன் மனைவி புத்திரி சகிதமாக வந்திருந்தார். "இன்று யார் வருவார்கள் யுத்தத்திற்கு? அப்படி வருகிறவர்கள் ஒருவருமில்லை" என்பதே ஜனக்கூட்டமடங்கலும் சம்பாஷணையாக விருந்தது.

சரியாக மணி ஒன்பதடிக்கும் சமயம் இராணி தன் பரிவாரங்களோடு வந்து மேடையிலமர்ந்தாள். அன்று இராணியைக் கண்டதே ஜனங்கள் முன் இரண்டு நாட்கள் செய்த ஆரவாரத்தைக் காட்டிலும் எத்தனையோ பங்கு அதிகமாக ஆரவாரம் செய்து பன்முறை சந்தோஷமான கரகோஷ்டமும் வாழ்த்துதலும் செய்தார்கள். அந்தோ! அச்சனங்கள் அக்காலத்தில் கொண்டிருந்த மூடக்கொள்கையின்படி, இராகவன் இரண்டு நாட்களும் தன்னையெதிர்த்தவர்களைச் செயித்ததினாலேயே இராணி பூரண நிரபராதி யென்றும் அவள்மேல் கூறப்பட்ட குற்றமனைத்தும் பொய்யென்றும் நம்பிக்கொண்டார்கள். ஆயினும் அக்காலத்திலும் அதனாலேயே இராணியை நிரபராதி யென்று கருதாமல் தலையசைத்த அறிவாளிகளும் சிலர் அக்கூட்டத்தில் இருந்தார்கள். ஜனங்களின் ஆரவாரிப்பைக்கண்ட இராணி "அய்யோ கடவுளே! இவர்கள் என்னை நிரபராதியென்று நம்புகிறார்கள். அய்யோ! என் மனச்சாட்சியும் அவ்வாறு பாதி நம்பக்கூடியதா யிருந்தால்..." என்று தன் மனதில் சிந்தித்ததும், அவள் கண்களில் ஜலம் துளித்தது. ஒருவருடைய மேல் வேடத்தைக்கண்டு உண்டாகும் புகழ்ச்சியால் அம்மனிதனுக்கு ஒருபோதும் சந்தோஷமுண்டாகாது. அப்புகழ்ச்சிக்கு நாம் உரியவன்தான் என்று அவன் மனச்சாட்சி சம்மதித்தால்தான் அதனால் அவனுக்குச் சந்தோஷமாவது உற்சாகமாவது உண்டாகும்.

இராணியோடுகூட பத்மநாயகி, சித்ராங்கி, இன்னும் இரண்டொரு மாதர்கள் உட்கார்ந்திருந்தார்கள். வழக்கம் போல் டாக்டர் தங்கவேலுப்பிள்ளை சிம்மாதனத்தின் பின்னால் உட்கார்ந்திருந்தார். இவர்களனைவரும் அன்று புண்ணியகோடிப்பிரபு வாராததைக் கவனித்தார்கள். இராணி,

பத்மநாயகி, டாக்டர் மூவரும் ஏககாலத்தில் இதைக் குறித்துச் சித்ராங்கியைக் கேட்டார்கள். சித்திராங்கி "ஆ! அவர் வராத காரணம் இன்னதென்று எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. எங்கு சென்றார்? என் மனதிற்குக் கலவரமாகவே யிருக்கிறது" என்றாள். இவர்கள் இதைப் பற்றி நெடுநேரம் சிந்திக்க அவகாசமில்லை. ஏனெனில் ஜனங்கள் போட்ட கோஷ்டத்தால் யாவரும் தலை நிமிர்ந்து பார்த்தார்கள். இராகவன் வருவதாலேயே இச்சத்தம் உண்டாயிற்றெனத் தெரிந்தது.

இராகவன் இரண்டு நாட்களாக அணிந்துவந்த அதே பலம்பொருந்திய கவசத்தை யணிந்துகொண்டு, அதே பெரிய குதிரைமேலேறிக்கொண்டு வந்தான். வழக்கமாக அவன்கூட வரும் அதே ஆட்கள் அவன் ஆயுதங்களைத் தாங்கி வந்தார்கள். ஆனால் இன்று அவன் தன் கவசத்தின் முகமூடியை மூடிக்கொண்டே வந்தான். இது வழக்கத்திற்கு மாறாக விருந்ததால் இதை யாவரும் கவனித்தார்கள். அவன் வழக்கம்போல் யுத்தபூமியை மும்முறை வலம் வரும்போதும் இராணியின் முன் நின்று வந்தனம் புரியும்போதும் கூட முகமுடியைத் திறக்கவில்லை.

ஜனங்களில் சிலர் "இவன் இரண்டுநாட் சண்டையில் முகவாட்டமடைந்திருப்பான். அதை வெளியிற் காட்டக் கூடாதென்று இப்படி மூடிக்கொண்டிருக்கிறான்" என்றார்கள். சிலர் "இது கடைசி நாளானதால் ஒரே துணிகரமாய்ச் செயமடைய வேண்டுமென்றெண்ணி இப்படிச் செய்திருப்பான்" என்றார்கள். சிலர் "இல்லை யில்லை, இன்று முடிவாய்ச் செயமடைகிறவரையில் முகமூடியைத் திறப்பதில்லை யென்று பிரதிக்கினை செய்துகொண்டிருப்பான்" என்றார்கள்.

இதைப்பற்றிய சந்தேகம் ஜனங்களுக்குள்மட்டும்

நிகழவில்லை. மேடைமேலுள்ளவர்களும் அதைக் கவனித்தார்கள். ஆனால் அவர்களும் பலவாறாய்ப் பேசிக்கொண்டார்கள். கடைசியில் ஒன்றுமறியாதவள்போலிருக்கும் சித்ராங்கி "இன்றைக்குக் கடைசியாய் நம்மோடு யுத்தம்புரிய வருபவன் நம்மைக்கண்டு அஞ்சவேண்டுமென்றே இப்படிச் செய்திருக்கலாகும்" என்றாள். யாவரும் அவ்வாறே அபிப்பிராயப்பட்டார்கள்.

வழக்கம்போல் பறை யறையப்பட்டது. ஆனால் மூன்றுமுறை பறை யறைந்தும் ஒரு எதிரியும் வரவில்லை. ஜனங்களுக்கு ஒருவரும் வரமாட்டார்கள் என்றே நிச்சயம். இராணி முதலியவர்களும் அவ்வாறே நம்பியிருந்தார்கள். ஆயினும் இராணிக்குள் ஒருசமயம் எப்படியோ என்று திகில்மட்டும் கொஞ்சம் இருந்தது. டாக்டர் தங்கவேலுப்பிள்ளைக்கும் சித்திராங்கிக்கும் மட்டும் மாயசிங்கன் வருவான் என்று தெரியும். ஆயினும் இருவரும் ஒன்றும் தெரியாதவர்கள்போலவே அபிநயித்தார்கள்.

நாழிகைகள் கழிந்துகொண்டேயிருந்தன. மணி பிற்பகல் இரண்டாகியும் ஒருவரும் வரவில்லை. இராணி முதலியவர்களுக்கெல்லாம் போகப்போகச் சந்தோஷமேயுண்டாயிற்று. ஆனால் ஜனங்களுக்கு அதிருப்தி யுண்டாயிற்று. கடைசியில் மணி மூன்றடிக்கும் சமயமு மாய்விட்டது. இன்னும் கொஞ்சநேர மாய்விட்டால் வேளை மீறிவிடும். அச்சமயம் கடைசி முறையாகப் பறையறையப்பட்டதும் "இன்னும் யாரேனும் யுத்தத்திற்கு வருகிறவர்களாயின் வரலாகும்" என்று அழைக்கப்பட்டது. அதேசமயம் குதிரைகள் வரும் சத்தம் கேட்டது.

இரண்டொரு நிமிடங்களுக்குள் இரண்டுபேர் குதிரைகள்மேல் அதிவேகமாய் யுத்தபூமிக்குள் நுழைந்தார்கள். அவர்கள் வரும் சந்தடியைக் கேட்டபோதே ஜனங்க

ளுக்குச் சந்தோஷமுண்டாயிற்று. ஏனெனில் யுத்தக்காட்சியைக் காணலாகுமென்று. ஆனால் இராணிக்கும் பத்மநாயகிக்கும் திகில் விழுந்தது. ஏனெனில் "இப்போது வருகிறவன் எப்படிப்பட்டவனோ; ஒரு சமயம் அவனால் இராகவனுக்கு அவமானமாவது தீங்காவது நேரிட்டுவிடுமோ" என்பதே. டாக்டருக்கும் சித்ராங்கிக்கும் மட்டும் ஓகோ மாயசிங்கன் வருகிறான் என்று மனதிற்பட்டது.

34-வது அத்தியாயம்

கடைசியுத்தம்—அதிசயமான வாலிபவீரன்—இராணியின் ஆள் தோல்வியடைதல்—மிக்க அதிசய சம்பவங்கள்.

மேற் கூறியபடி இரண்டு பேரும் யுத்தபூமிக்குள் வந்ததைக் கண்டதே டாக்டருக்கும் சித்ராங்கிக்கும் உண்டான ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. ஏனெனில் உயரமும் பருமனும் மிக்க பலமும் பொருந்திய பயங்கர உருவமுடைய வீரனுக்குப் பதிலாக மெலிந்த இளமைவாய்ந்த தேகமுடைய ஒருவனே யுத்தத்திற்கு வந்திருக்கிறான். அவனுடைய கவசமும் பலமும் பாரமுமுடையதாகத் தோன்றவில்லை. ஆனால் அவன் கவசம் பளபளவென்று பிரகாசம் பொருந்தியதாகவும் தங்கப்பூச்சுடையதாகவு மிருந்தது. அக்கவசத்தின் தன்மையால் அவன் அவயவங்கள் அவன்தேக அளவிற்குத் தக்கபடி மிக்க அழகிய வடிவங்களாக அமைந் திருக்கின்றனவென்று தெரிந்தது. அவன் ஏறியுள்ள குதிரையும் பிரம்

மாண்டமானதாயிராமல் ஒட்டியவயிறும் கயிறுபோன்ற தேகமும் உடையதாயிருந்தது. ஆனால் அது மிக்க அழகு வாய்ந்த உயர்தர வெள்ளைப்புரவி. அது அவ்வீரனையொரு துரும்புபோல் சுமந்திருந்தது. அவ்வீரன் தன் கவசத்தின் முகமூடியை மூடிக்கொண்டேயிருந்தான். அவன் பின்னால் வந்தவனும் அவனைப்போன்றே மெல்லிய சிறிய உருவமுடையவனாக விருந்தான். அவன் ஏறியகுதிரையும், சிறிய அழகிய குதிரையே. இருவருடைய காட்சியும் காண்போர்க்கு மிக்க இனிமையாகவும் சந்தோஷத்தையுண்டாக்கத் தக்கதாகவு மிருந்தது. யாவரும் அவர்களைக் கண்டதும் ஆரவாரித்துக் கரகோஷ்ட மிட்டார்கள். ஆனால் மறுநிமிடம் அனைவரும் பரிதாபமான பார்வையோடு அவர்களை நோக்கினார்கள். ஏனெனில், அந்தோ! இவ்வளவு அழகிய இனிய உருவமுடையவாலிபன் என்னதான் தைரிய முடையவனாயினும், துஷ்டகேதுவையும் குமர்சிங்கம் பிரபுவையும் வென்ற பலம்பொருந்திய இராகவனோடு சண்டைசெய்ய வல்லமை யுடையவனாகமாட்டேனே என்று வருந்தினார்கள்.

இராணி முதலியவர்கள் "இவனோ இராகவனைவெல்ல வல்லவன். இவன் ஒரு பதுமைவீரன் ...." என்று கேலியாய் வார்த்தையாடிக் கொண்டார்கள். டாக்டருக்கு ஒன்றும் விளங்கவில்லை. இவன் யார் என்று உணரக்கூடவில்லை. ஆயினும் பேசாம லிருந்தார். வந்த வீரனோ முறைப்படி அரங்கத்தை மூன்று முறை வலம்வந்து யுத்த பூமியின் மையத்தில் சென்று நின்றான்.

வழக்கப்படி பெயரைக் கேட்டபோது கூறமாட்டேனென்று சமிக்கையாய்த் தெரிவித்தான். இதுயாவர்க்கும் வியப்புண்டாக்கி விட்டது. பிறகு நீ இராணியின்மேல் குற்றங் கூறியதை நிரூபிக்கவா வந்தாய் என்று கேட்ட

தற்கு அல்லவென்று தலையாட்டினான். இராகவப்பிரபுவின்மேல் வஞ்சந்தீர்த்துக் கொள்ள வந்தாயோ என்றதற்கு ஆம் என்று தலையசைத்தான். இவற்றால் யாவர்க்கும் மிக்க வியப்புண்டாயிற்று. ஆயினும் ஜனங்களுக்கெல்லாம் "அய்யோ! அழகிய இவ்வாலிபன் பலசாலியாகிய இராகவனிடம் சிக்கி என்ன துன்பத்தை யடைவானோவென்றே மிக்க பரிதாபமுற்றார்கள். உடனே பறையறையத் தொடங்கியதும் வந்த வீரன் இராகவன் நிற்குமிடத்திற்கு எதிர்ப்பக்கம் கோடியில் சென்று நின்று தன் ஈட்டியைக் கரத்தி லேந்திக்கொண்டு யுத்தத்திற்கு ஆயத்தமாகினான்.

மூன்றுமுறை பறை யறையப்பட்டதும் இரண்டுவீரர்களும் அதிவேகமாகத் தங்களிடங்களினின்று பாய்ந்து சென்றார்கள். வாலிபவீரன் குதிரையின் பாதங்கள் பூமியிற் படுவதே கண்களுக்குப் புலப்படவில்லை. அதன் நீண்ட உருவம் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்ததுபோல் தோன்றிற்று. "ஆச்சு, இன்னும் இரண்டொரு விநாடிகளில் இரண்டு குதிரைகளும் யுத்தபூமியின் மத்தியஸ்தானத்தில் மோதிக்கொள்ளப் போகின்றனவே, இந்த வாலிபனும் இவன் சிறிய குதிரையும் பலம்பொருந்திய இராகவன் குதிரையின் பாரமான வேகத்தைத் தாங்கமுடியாமல் எவ்வளவு தூரத்தில் எறியப்பட்டு என்னபாடு படுமோ" என்று யாவரும் விசனத்தோடும் ஆவலோடும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஓ! மறுவிநாடி இரண்டு வீரர்களும் சந்தித்தார்கள். அச்சமயம் இமைகொட்டுமுன் வாலிபவீரன் தன் கேடையத்தைத் தந்திரமாகப் பிடித்ததால் இராகவன் ஈட்டி அதன் மேற்பட்டு வழுக்கிக்கொண்டு போய்விட்டது. அதோடு அதே சமயம் வாலிபவீரன் தன் புரவியைத் தந்திரமாய்

நடத்தியதால் அது இரண்டடி ஒரு பக்கம் விலகிச் சென்றது. அதனுல் அவனுடைய ஈட்டி இராகவன் கவசத்தின் மேல் தாக்கித் தூள் தூளாய்ப் பறந்துவிட்டது. இராகவன் தடுமாற்றமுற்றுக் குதிரையினின்றும் கீழேவிழ ஒரு மயிரிழையே தப்பினுன். வாலிபவீரன் சட்டென்று தன் வாளையுருவிக்கொண்டான். இதற்குள் இராகவன் சற்று சமாளித்துக்கொண்டு தன் ஈட்டியை யெறிந்துவிட்டுத் தானும் வாளை யெடுத்துக்கொண்டான். இதைக்கண்ட யாவரும் மிக்க வியப்படைந்தார்கள். உருவத்தில் சிறிய உருவமாகவும் வாலிபனுகவும் குறைந்த பலமுடைய மெலிந்த தேகியாகவும் தோன்றும் அவ்வாலிபன் இவ்வளவு தைரியமும் சாமார்த்தியமுமுடையவனு யிருப்பானென்று ஒருவரும் கருதி யிருக்கவில்லை. சூக்கும அறிவுடைய சிலர் இராணியின் வீரன் அதிக பலமுடையவனுயினும் கடைசியில் இவ்வாலிபனுடைய சாமார்த்தியமும் புத்தி நுட்பமும் நிதானமுமே ஜெயமடையும் என்று பேசிக் கொண்டார்கள்.

இராணியும் மற்றபேரும் பெருந்திகிலடைந்து விட்டார்கள். இராணியின் மனதில் பலவிதக் கலவரங்கள் உதித்தன. பத்மநாயகிக்குத் தன் புத்திரனுக்கு எங்கே அவமானம் நேரிடுமோ வென்றதொருபக்கம்; ஆபத்துண்டாகுமோ வென்பதொருபக்கம். இரண்டாலும் அவள் மிக்க மனோவேதனைக் குள்ளானுள். வீரர்களிருவரும் கத்திகளால் சண்டை செய்யத் தொடங்கினுர்கள். சற்று நேரத்திற்குள் வாலிபவீரன் வாட்போரில் இராகவனுக்குச் சற்றும் பின்னிடைந்தவனல்ல வென்றும், அவனிடமிருக்கும் எச்சரிக்கையும் சாந்தமும் இராகவனிடத்தில்லையென்றும் யாவரும் உணர்ந்து வியப்படைந்தார்கள். இராகவன் மிக்க ஆங்காரத்தோடு பன்முறை அவ்வாலிபன்

மேற் பாய்ந்து தாக்கியும், அவன் மிக்க தந்திரசாமார்த்தியத்துடன் இராகவனுடைய நோக்கங்களை முன்னுடியாகவே யுணர்ந்து அவன் வாள் வீச்சுக்களையும் குத்துக்களையும் சட் சட்டென்று தடுத்துத் தட்டிக்கொண்டே சமயத்தை யெதிர்பார்த்திருந்தான். இராணியின் வீரன் தன் பிரயத்தனமனைத்தும் வீணுக்கப்படுவதைக்கண்டு மனம் பொங்கி ஆத்திரத்தோடு இவனை யிந்த ஒரே வீச்சில் ஒழித்துவிடவேண்டுமென்று கருதித் தன் குதிரையைப் பின்னுக்குச் சற்று செலுத்தி அங்கிருந்து பாய்ந்து தன் வாளை யோங்கிக்கொண்டுவந்து வாலிபன் சிரசின்மே லடிக்க முயன்றுன். வாலிபன் தந்திரமாய் விலகிக்கொண்டு இராகவன் வாள் ஆகாயத்தையே வெட்டும்படி செய்துவிட்டு அவன் மறுபடி வாளை யோங்குவதற்குள் பக்கவாட்டில் தன் வாளின் முதுகைத் திருப்பிக்கொண்டு ஓங்கி இராகவனுடைய கேடையத்தின்மே லடிக்க அக்கேடையம் இரண்டு துண்டுகளாகப் பிளவுண்டு விழுந்தது.

இக் காட்சியைக் கண்டவுடனே இராணிக்கும் பத்மநாயகிக்கும் ஆவி சோர்ந்துவிட்டது. ஏனெனில் இராகவன் இனிக்கேடையமின்றியே யுத்தம் புரியவேண்டுமாதலால் மிகச் சுலபத்தில் வெல்லப்படலாம். அதுமட்டுமல்ல; அபாயத்தில் சிக்கிக்கொள்ளவும் நேரிடும். எதிரி தயவினல் அவனுக்கு அதிக தீங்கிழைக்காமலிருந்தாலேயவன் தப்பலாகும். ஜனங்களெல்லாம் இமைகொட்டாமல் பார்த்திருந்தார்கள். ஏனெனில் வாலிபவீரன் இனி இரண்டொரு நிமிடங்களில் இராகவனை வென்றுவிடக்கூடும். ஆயினும் அச்சமயம் ஒருமிக்க அதிசய சம்பவம்நேர்ந்தது.

அதாவது இராகவனுடைய கேடையம் இவ்வாறு இரண்டு துண்டாகி விழுந்துவிட்டதைக் கண்டதே அவ்வாலிபவீரன் தன் கையிலிருந்த கேடையத்தைத் தட்டென்று

கீழே யெறிந்துவிட்டு எதிரியோடு யுத்தம்செய்யத் தொடங்கினான். இந்த அதிசயமான உதாரகுணத்தைக் கண்டதே ஜனங்கள் "ஒகோ! மகா உதாரகுணமுடையவன்" என்றும் "இவனே சுத்தவீரன்" என்றும் "இவன் ஜெயமடைந்த மாதிரியே" என்றும் "ஓ இவன் தெய்வ அருளுள்ளவன்" என்றும், "வாலிபனுக்கே ஜெயம்! வாலிபனுக்கே ஜெயம்" என்றும் கோஷ்டமிட்டார்கள். யுத்தம் நடக்கும்போது எதிரியின் ஆயுதத்தால் ஒருவனுடைய ஆயுதமாவது கேடையமாவது பறிக்கப்படினும் அழிக்கப்படினும் அவன் நியாயப்படி தோல்வியடைந்தவனாக வேண்டியதே. மற்றவன் இவனை யுடனே தாக்கிக்கொன்றாலும் கீழே வீழ்த்தி வெற்றி பெறினும் அது நீதியேயாகும். ஆகையால் வாலிபவீரன் உடனே இராகவனைத் தாக்காமல் விட்டது பெருங்கருணையும் உதாரத்துவமுமாகிய செயலாகக் கருதப்பட்டது. அதோடு அவன் தன் கேடையத்தையும் எறிந்துவிட்டது "சே! இப்போது நாம் இவனை வெல்வது கௌரவமாகாது. ஏனெனில் அவனிடம் கேடையமில்லாததால் சுலபமாய்ச் செயித்துவிட்டான் என்று அலட்சியமாகத் தோன்றும்" என்று கருதியதுபோல் தெரிந்தது. ஆயினும் அவ்வாறு ஜயமடையவேண்டியவன் தன் கேடையத்தை யெறிந்துவிட்டு சண்டைச்செய்யும்படி சம்மதிப்பது வீரத்தன்மைக்கு ஒழுங்கல்லவாதலால் அதை யாரும் ஒப்பவில்லை. அப்படிப் பிரியமானால் கேடையத்தை யிழந்தவனுக்கு வேறு கேடையம் வேண்டுமாயின் அளிக்கப்படும் என்று கூறப்பட்டது.

அவ்வாறே இராகவனுக்கு வேறுகேடைய மளிக்கப்பட்டதே வாலிபவீரனும் தன் கேடையத்தைத் தாங்கி யுத்தத்திற்கு ஆயத்தமானான். மறுபடி இருவருக்கும் யுத்தம் நடந்தபோது இராகவனே அடிக்கடி அபாய நிலைமையி

சிக்கிக்கொண்டு தப்பித்துவருவதைக்கண்ட இராணிக்கும் பத்மநாயகிக்கும் மிக்க மனவேதனை யுண்டாய்விட்டது. போகப்போக இராகவன் மிக்க ஆத்திரமடைந்து ஒழுங்காவது நிதானமாவதின்றி வாளை யுபயோகிக்கத் தொடங்கிக் கடைசியில் மிக்க ஆத்திரத்தோடு வாலிபன்மேல் பாய்ந்து தன் முழுப் பலத்தோடும் வாளை யோங்கி வெட்டினான். ஆனால் வாலிபன் மிக்க சாமார்த்தியத்தோடு இராகவன் வாளைத் தன் கேடையத்தின் மையஸ்தானத்தின்மேல் ஏந்திக்கொள்ளவே, அவன் கத்தி இருதுண்டுகளாக உடைந்தது. மறுவினாடி இராகவன் பூமியில் உருண்டுவிட்டான். ஜனக்கூட்டத்தில் பெரிய சந்தோஷக் கூச்சல் உண்டாயிற்று. இச்சம்பவத்தைக்கண்ட இராணி முகத்தை மூடிக் கொண்டாள். பத்மநாயகியின் மனம் துடிதுடித்தது.

ஜெயமடைந்தவாலிப வீரன் குதிரையினின்றும் கீழே குதித்து மும்முறை கத்தியைச் சுழற்றிவிட்டுத் தோல்வியடைந்த வீரன் சிர அணியிலிருந்த இறகுகளி லொன்றை யெடுத்துக்கொண்டு, அதைத்தன் ஈட்டிமுனையில் குத்திக் கொண்டு குதிரையேறி அந்த விடத்தை வலம்வரத் தொடங்கினான்.

இதற்கிடையில் இராகவனுடைய ஆட்கள் ஓடிப் போய்க் கீழே வீழ்ந்துவிட்ட தங்கள் எஜமானுடைய கவசத்தின் முகமூடியைத் திறந்தார்கள். அவ்வாறு திறந்து அவன் முகத்தைக் கண்டதும் அவர்களுக்குண்டான வியப்புக்கோர் அளவேயில்லை. ஏனெனில் அங்கு விழுந்திருப்பவன் இராகவனல்ல, புண்ணியகோடிப் பிரபுவே. அவன் தங்கள் எஜமானுடைய கவசத்தையே யணிந்து கொண்டிருந்தும், எஜமானுடைய குதிரையின் மேலேயே யேறிவந்திருந்தும் தாங்கள் அதை யறியாதிருந்தது அவர்களுக்கு வியப்பினும் வியப்பாக விருந்தது.

இச்சங்கதி ஒரு நொடியில் எங்கும் பரவிவிட்டதும் ஜனங்களுக்குச் சொல்லொணு வியப்புண்டாகி விட்டது. இது ஏன் இப்படி நடக்கவேண்டு மென்று எவருக்கும் விளங்கவில்லை. இச்சங்கதி இராணியிருக்கும் மேடைக் கெட்டியதே இராணிக்கும் பத்மநாயகிக்கும் முதலில் மனத்திகில் ஒழிந்து சந்தோஷமே யுண்டாயிற்று. சித்ராங்கி புண்ணியகோடிப்பிரபு எவ்வாறு அங்குவந்தானென்பதை அடியோ டறியாதவள் போலவே அபிநயித்தாள். டாக்டர் தங்கவேலுப் பிள்ளைக்கோ இதைப்பற்றி அக்கரையேயில்லை. ஏனெனில் இராணி நிரபராதியென்று ஜனங்கள் முன்னமே நம்பிவிட்ட வரையில் தன்கையில் சிக்கிக்கொண்டிருக்கும் ஆளே அரசியாக விருக்கிறுள், தன் செல்வாக்குக்கு ஒரு இடையூறும் நேராது, அவ்வளவே அவனுக்கு வேண்டியது.

அந்த விடத்தை வலம்வந்து கொண்டிருந்த வாலிப ஜெயவீரன் அங்குண்டான வதந்தியை யறிந்ததும் நேராய்ப் புண்ணியகோடிப் பிரபு விருக்குமிடத்திற்கு வந்தான்; அதற்குள் அப்பிரபுவும் மூர்ச்சைதெளிந்து நடந்த விஷயங்களை யுணர்ந்து தன் அபஜெயத்தை நினைத்து மிக்க துயரமடைந்து மெதுவாய் சமாளித்துக் கொண்டு எழுந்து அங்கேயே யுட்கார்ந்தான். வாலிபவீரன் அவனை நோக்கி "பிரபுவே! தங்கள்மேல் எனக்கு எள்ளளவு துவேஷமுமில்லை. நீங்கள் தான் இங்கு வந்திருப்பதென்று எனக்குத் தெரிந்திருந்தால் நான் யுத்தம்செய்தேயிரேன். நான் கோரிவந்தது இராகவப் பிரபுவோடு யுத்தம் புரியவே" என்றுன்.

புண்ணியகோடிப் பிரபு தன் கரத்தை நீட்டி வாலிபன் கரத்தைப் பற்றிக்கொண்டு "நீ மிக்கபெருந்தன்மை வாய்ந்த கம்பீரபுருடன். தயவுசெய்து உன்து நாமதே

யத்தைக் கூறவேண்டும்" என்றான். வாலிபன் "ஆ! இப்போது வேண்டாம். இப்போது வேண்டாம். இன்னொருசமயம். ஆனால் இது முதல் நாம் இருவரும் நண்பர்களே" என்று கூறிவிட்டுத் தன் ஈட்டிமுனையி லிருக்கும் இறகை எடுத்துப் புண்ணியகோடி யிடமே அளித்துவிட்டான். ஏனெனில் அவனை வென்றதாக அவன் சிரோபூஷணமாக விருந்த அந்த இறகையாவர்க்கும் காட்டிக்கொண்டு சுற்றிவர அவனுக்குப் பிரியமில்லை. ஆயினும் ஜெயமடைந்த வீரன் அத்தகைய ஏதேனும் ஒரு பொருளைப் பரிசாக மரியாதைக்காக ஒரு மாதினிட மளிக்க வேண்டும். அந்த மாதையே அழகில் மிகுந்தவளென்று அவன் மதித்ததாகக் கருதப்படும். அம்மாதும் அதை யொரு பெருங் கீர்த்தியாக மதிப்பாள். அது அத்தேச ஆசாரம்.

ஒருவன் மனைவி அல்லது ஒரு கன்னிகை இத்தகை யோருடைய வனப்பை யொருவாலிப புருடன் கண்டு மகிழ்ந்து அவளுக்குப் பரிசளிப்பதும், அதை யவளும் அவளைச் சேர்ந்தவர்களும் பெரிய கௌரவமாக மதிப்பதும் எத்தகைய நாகரீக மென்பதையும் இதனால் நன்மை விளையுமா தீமைவிளையுமா வென்பதையும் இதைவாசிப்போரே அறிந்து கொள்ளலாம். இவ்வாலிப வீரன் தன் சிரசிலிருந்த இறகுகளி லொன்றை யெடுத்து ஈட்டிமுனையிற் சொருகிக்கொண்டு யுத்தபூமியை வலம்வரத் தொடங்கினான். அவன் முதல் முறை சுற்றும்போதும் இரண்டா முறை சுற்றும்போதும் அந்த இறகை இராணியிட மளிக்கவில்லை. இது அனேகர்க்கு வியப்பை யளித்தது. இராணியும் இதைப்பற்றிக் கொஞ்சம் மனவருத்த மடைந்தாள். ஏனெனில் அத்தகைய வாலிபவீரன் தன் கம்பீரமான வனப்பைச் சிறந்ததாகக் கருதி அந்தப்பரிசைத் தனக்கே

யளிப்பானென்று ஆவலோ டெதிர்பார்த் திருந்தாள். மற்ற ஜனங்களும் அவ்வாலிபன் இவ்வாறு இராணிக்கு அதை யளிக்காததைக் கவனித்தார்கள். கடைசியாக அவன் மூன்றுமுறை சுற்றி வரும்போது அங்கிருந்த அழகிய கன்னிகைகள் ஒவ்வொருவரும் அந்த இறகு தனக்கு அளிக்கப்படுமா வென்றும் அக்கௌரவம் தனக்குக் கிடைக்குமா வென்றும் ஆவலோடு எதிர் பார்த்ததோடு வேறு எவள் இதைப் பெறுவாளோ வென்று பொறாமையுடையவர்களாகவும் இருந்தார்கள்.

வாலிபவீரன் மூன்றும் முறை சுற்றிவரும்போது தன் மனதிலிருக்கும் யாரையோ தேடுகிறவன்போல் ஒவ்வொரு கன்னிகையையும் மிக்க உன்னிப்பாய்ப் பார்த்துக் கொண்டே சென்றான். கடைசியில் பிரபுக்கள் குடும்பத்தார் உட்கார்ந்திருக்கும் ஆசனங்களுக் கெதிரில் சென்றபோது அங்கு உட்கார்ந்திருந்த குசலாம்பாளைக் கண்டதும் அவன் முகத்தில் சந்தோஷப் பிரகாசம் உண்டாயிற்று. அவன் உடனே தன் ஈட்டியின் முனையிலிருக்கும் இறகை அக்கன்னிகையிடம் அளித்தான்.

அச்சமயம் குசலாம்பாள் மனதில் மிக்க வியப்பும், கலவரமும், சந்தோஷமுமாகிய உணர்ச்சிகள் ஏககாலத்தில் தோன்றின. அவள்மனதில் இவன் நாம் மூன்றுமுறை சந்தித்தவனும், நம்மைத் துஷ்டகேதுவின் கையிலிருந்து விடுவித்தவனும் நமது மனதிலிருந்து நீங்காதிருப்பவனுமாகிய அந்த வாலிபனே யென்று அவளுக்குப் புலப்பட்டது. ஆகையால் அவள் ஒன்றும் கூறமுடியாமல் நாணத்தோடும் புன்னகையோடும் அந்த இறகை யெடுத்துக் கொண்டு அவனுக்கு வந்தன மளித்தாள்.

உடனே எங்கும் அழகரசிவாழ்க! நமது இராணி வாழ்க என்று பெருங்கோஷ்டம் பன்முறை கிளம்பின.

யாவராலும் புகழப்பட்ட அவ்வாலிப வீரன் தன் கூட வந்த ஆளோடு யுத்தபூமியினின்று புறப்பட்டுத் தன் குதிரையைத் துரிதமாய் விட்டுக்கொண்டு வந்தவழியே சென்றான். இதனால் அவன் யாரென்று ஒருவரும் அறியக் கூடாமல் மிக்க வியப்போடு திகைத்தார்கள். மூன்றுவது நாள் யுத்தமும் இவ்வாறு முடிந்தது.

புண்ணியகோடிப் பிரபு அப்போதே அரண்மனையில் அவனுக்கு விடப்பட்டிருந்த அறைக்குக் கொண்டுபோகப்பட்டான். இராணி முதலிய அனைவரும் புறப்பட்டு மாளிகைக்குச் சென்றார்கள்; வழக்கத்தைவிட அதிகமாகக் கடைசி நாளாகிய அன்று அதிகப்பணம் ஏழைகளுக்களிக்கப்பட்டது. யுத்தபூமியில் இரவு நெடுநேரமட்டும் விருந்தும் கேளிக்கையும் நடந்தபின் அவரவர்கள் தத்தம் மனைக்கேகினர். இராணி பூரண நிரபராதியென்றே ஏறக்குறைய எல்லாச் சனங்களும் நம்பிக்கொண்டார்கள்.

நேயர்களே! வெளித் தோற்றத்தைக் கண்டதனாலேயே நம்பிக்கைவைப்பது மூடத்தனம் என்பதும், உலகப்புகழ்ச்சியை மதித்து அதைவிரும்பலாகாதென்பதும் இத்திருட்டாந்தத்தால் நன் குணரலாகும். ஏனெனில் உலகம் ஏதேனும் ஒரு மூடக்கொள்கையையேனும், கேவலம் செல்வம், படாடோபம் முதலியவற்றையேனும் காரணமாகக் கொண்டு மயங்கிவிடும் சுபாவமுடையது. சற்று சூக்கும அறிவோடு உற்று நோக்குவோர் இத்தகைய அனேக அத்தாட்சிகளைப் பிரத்தியட்சமாய் உலகிற்காணலாகும். இவற்றை யாழ்ந்துணர்ந்து நடப்பதே அறிவாளிகளுக் கழகாகும்.

35-வது அத்தியாயம்.

இராகவன் ஏமாற்றப்பட்ட விவரம்—இராகவனுடைய ஆலோசனைகள்—இராகவனுக்கும் இராணிக்கும் நடக்கும் இரகசிய சம்பாஷணை—பயங்கர அதிசய சம்பவம்—விருந்து மண்டபத்தில் குழப்பம்—இராகவனும் சித்திராங்கியும்—சித்திராங்கியின் மோச வஞ்சம்.

தங்கள் எஜமானுக்குப் பதிலாகப் புண்ணியகோடிப் பிரபு எப்படியோ வந்துவிட் டிருக்கிறான் என்பதை யறிந்த இராகவனுடைய ஆட்கள் துரிதமாய் நேரே அரண்மனைக்குச் சென்றார்கள். இராகவனுடைய முக்கியமான கையாள் அவன் சயன அறைக்குள் சென்றபோது இராகவன் அப்போது தான் பெருந்தூக்கத்தி லிருந்து எழுந்து உட்கார்ந்து தேகத்தை நெட்டை யுடைத்துக் கொண்டிருக்கிறான்.

அவன் தன் ஆளைக்கண்டதும், மணியென்னபார்த்து வா வென்றான். அந்த ஆள் அக்கேள்விக்கு நேராகவிடையளிப்பதை விட்டு அன்று யுத்தபூமியில் நடந்த விஷயங்களை விவரமாய்க் கூறினான். அவற்றைக் கேட்ட இராகவன் முதலில் மிக்க வியப்பும் கோபமுமடைந்தான். ஆயினும் "இந்தப் புண்ணியகோடிப் பிரபு தான் வெற்றி பெற்று இராணியின்நன்மதிப்பைப் பெறவேண்டுமென்று இவ்வாறு சூதுசெய் திருக்கிறான். ஆனால் அதற்குப்பதில் பூரண அவமான மடைந்தே திரும்பிவந்து சேர்ந்தான்." என்று தனக்குள் சந்தோஷமே யடைந்தான். மேலும் அன்று மாயசிங்கன் வராதவரையில் புண்ணியகோடிப்

பிரபு இவ்வாறு சூதுசெய்யாமல் தானே அங்குசென்றிருந்தாலும் தான் மாயசிங்கனைச் சந்தித்து அவனை வெற்றிபெற வெண்ணியிருந்த கோரிக்கை நிறைவேறி யிராதென்று உணர்ந்தான்.

இராகவன் தான் அவ்வளவு நேரம் நித்திரைசெய்த தன் காரணத்தையும் நடந்த விஷயங்களையும் சிந்தித்து உண்மையை யொருவா றுணர்ந்து கொண்டான். எவ்வாறெனின் தனக்கு ஆரம்பத்திலேயே என்றுமில்லாத விதமாகச் சமாளிக்க முடியாத உறக்கம் வந்தது அவன் நினைவிற்குவந்தது. அதோடு பின் நித்திரைசெய்த மாதிரியையும் விழித்தபின் தனக்கிருக்கும் உணர்ச்சியையும் கருதிய போது தனக்கு மயக்கமருந் தளிக்கப்பட்ட தென்று உணர்ந்து கொண்டான். பிறகு வழக்கத்திற்கு மாருகச் சித்ராங்கி தன் பக்கத்தில் உட்கார்ந் திருந்ததைக் கருதியதே அவளே ஏதோ மயக்கமருந்து நமது பானத்தில் போட்டுவிட்டா ளென்று தீர்மானித்துக் கொண்டான். தன் காதலனுகிய புண்ணியகோடிப் பிரபுவுக்கு உதவி செய்யவே அப்படிச் செய்தாளென்று அவன் மனதிற் பட்டது. அவள் நம்மை வசப்படுத்தக் கருதியிருக்கிருளென்று அவன் நினைக்கவில்லை.

ஆனல் இதற்கு வஞ்சந் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான். எவ்வாறெனின், தான் அவள்மேல் காதல்கொள்வதாக அபிநயிப்பதென்று தீர்மானித்தான். இதனல் அவள்மேலும் புண்ணியகோடிப்பிரபுவின்மேலும் வஞ்சந்தீர்த்துக் கொள்ளலாம். எவ்வாறெனின் புண்ணியகோடிப் பிரபு அவள்மேல் மிக்க காதலுடையவனுதலால் இச்சங்கதியை யறிந்ததே அவன் மனம் பொருமையால் வேதனைப்படும். கடைசியில் சித்ராங்கியை நோக்கி "நான் உன்மேல் வஞ்சம் தீர்த்துக்

கொள்ளவே காதலுடையவன்போல் நடித்தேனே யன்றி உண்மையில் உன்மேல் எனக்கு எள்ளளவு அன்பேனுங் கிடையாது" என்று கூறிவிட்டால் அவளும் அவமான மடைந்து வேதனை யுறுவாள். இதனல் இன்னொரு முக்கிய அனுகூலமுண்டாகும் என்பது அவன் உட்கருத்து. அதாவது, தான் சித்ராங்கியின்மேல் காதல் கொள்வதை இராணியறிந்தால், தன் காதலனைத் தன்தோழி வசப்படுத்திக் கொள்வதைக் கண்டு மனஞ்சகிக்க முடியாமல் உடனே தன்னைக் கணவனகவே ஆக்கிக்கொள்வாள் என்பது அவன் உத்தேசம்.

இராணி தன்னை மணம்புரிந்து கொள்வதாக வாக்களித் திருந்தாலும் அதைத்துரிதப்படுத்த வேண்டுமென்று இராகவன் கருதியதற்குக் காரண முண்டு. எவ்வாறெனின், இராணி மாயசிங்கனை அரண்மனையில் நேரில் கண்டது முதல் ஆயுதசாலையில் கண்டகாட்சிகள் யாவும் கனவல்ல, உண்மையேயென்று அறிந்துகொண்டாள். அவ்விஷயத்தில் அது கனவென்று கூறித் தன்னை யேமாற்றியதற்காக இராகவனைத் தான் மன்னித்ததாகக் கூறியிருப்பினும் அக்காட்சியால் அவள் மனதிலுண்டான பயம் சற்றும் நீங்கவில்லை. இரண்டாவது நாள் யுத்தம் நடந்தபின் அன்றிரவு யாவரும் போசனம் செய்து கொண்டிருக்கையில் இராகவன் இராணியிடம் தந்திரமாகப்பேசி, இப்போது நான் நீ நிரபராதியென்று ருசுப்படுத்திவிட்டேன். நாளை யொருநாள் விஷயமும் முடிந்தவுடனே நீ வாக்களித்தபடி எனக்குப் பரமானந்தத்தை யுண்டாக்கவல்ல அப்பரிசையளிப்பா யல்லவா. அதாவது நமது திருமணம்..." என்றான். இராணி உடனே மன நடுக்கங்கொண்டு "ஆ! என் காதலனே! அவ் விஷயத்தைப்பற்றி என் குடிகளின் கோபம் பூரணமாகத் தணிந்து அவர்களுக்கு என்மேல்

நன்றாக நம்பகம் உண்டாகும்வரை பொறுக்க வேண்டும்'' என்று கூறினாள். ஆகையால் அவள் மனதில் இன்னும் பயம் இருப்பதால் தன்னை மணம் செய்துகொள்ள அச்சப்பட்டுக் கொண்டே ஆலசியம் செய்வாளென்று கருதியே இவ்வாறு அவளுக்குப் பொறாமையுண்டாகச்செய்தால் உடனே நம்மை மணம்புரிந்துகொள்வா ளென்று தீர்மானித்துக் கொண்டான்.

இராகவன் நித்திரைவிட்டெழுந்து தேகசுத்திசெய்து உடுத்திக்கொண்டு அறையை விட்டுப் புறப்படுவதற்குள் யுத்தம் நடந்தவிடத்தி லிருந்து இராணி முதலியவர்கள் அரண்மனை வந்து சேர்ந்தார்கள். முன்னே இராகவன் யுத்தபூமிக்கு வாராததை யறியவேண்டுமென்பதே அவர்கள் பேராவல். அவர்கள் வந்து அறையில் உட்கார்ந்ததும், இராகவனும் அங்குசென்றான். தான் அன்று யுத்தத்திற்கு வாராததற்குக் காரணம் எப்படியோ நெடுநேரம் நித்திரை போய்விட்டதே யாகும் என்று தந்திரமாய்க் கூறிவிட்டானே யன்றி உண்மையைக் கூறவில்லை.

புண்ணிய கோடிப்பிரபு தன் அனுமதியின்றி இராகவன்போல் வேடமணிந்து யுத்தபூமிக்கு வந்த குற்றத்திற்காக, அவனை நகரத்திலிருந்து துரத்திவிட வேண்டுமென்றே இராணி தீர்மானித்தாள். ஆனால் டாக்டர் தங்கவேலுப்பிள்ளையின் கருத்து அவனையும் இராகவனுக்குப் போட்டியாக அங்குவைத்துக்கொண்டே யிருக்கவேண்டுமென்பது. அப்படி யிருந்தால் தன்செல்வாக்கு எப்போதும் எல்லாவற்றிலும் மேம்பட்டதா யிருக்கும் ஆகையால் அவன் இராணியை நோக்கி "அப்படி யொருபோதும் செய்யலாகாது; ஏனெனில் அவனுக்கு நமது இரகசியம் நன்றாய்த் தெரிந்திருப்பதால் அவனை விரோதியாக்கிக்கொள்ளலாகாது; மேலும் மகாராணிக்கு இச்சமயம்

மனமொத்த சிநேகர் இவ்வளவாவ திருப்பது அவசியம். தங்கள் அனுமதியின்றி அவன் நடந்துகொண்ட குற்றத் திற்கு அவன் அடைந்த அவமானமே போதுமான தண் டனையாகும்.'' என்றுகூறி இராகவனைப்பற்றிப் புகழ்ந்து முடிவில் “நமது வீரத்தன்மை பொருந்திய இராகவப் பிரபுகூட என் அபிப்பிராயத்திற்குச் சம்மதிப்பார் என்று நம்புகிறேன்'' என்றான். இராகவனும் விதியில்லையென்று அவ்வாறேகூறிப் புண்ணியகோடிப் பிரபுவை இராணி மன்னிக்கும்படி செய்தான்.

இது முடிந்தபின் சற்று நேரங்கழித்து யாவர்க்கும் விருந்து போஜனம் வட்டிக்கப்பட்டது. இராணியின் வலப்பக்கத்தில் இராகவன் உட்கார்ந்தான். சித்ராங்கி தன் கருத்தின்படி சமயம்பார்த்து அவனை மயக்கவேண்டு மென்று அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள். போஜனம் செய்துகொண்டும் மதுபான மருந்திக்கொண்டும் யாவ ரும் மிக்க கேளிக்கையாக இருக்கும் சமயத்தில் இராக வன் மெதுவாய் இராணியிடம் மிக்க அன்பான வார்த்தை களால் பேசத்தொடங்கி, “என் உயிரினும் அரியகாத லியே! நடந்த யுத்தங்களில் நான் நடந்துகொண்ட மாதி ரியால் உன்மனம் திருப்தியும் சந்தோஷமு மடைந்ததா? உன்மேல் குற்றம் கூறப்பட்டது பொய் என்று விளக்கப் பட்டதா?'' என்றான்.

இராணி மிக்க அன்போடு “ஆகா! சந்தேகமென்ன! நான் திருப்தியும் சந்தோஷமும் எப்படி அடையாம லிருக்கக்கூடும்? மூன்றுவது நாளும் நீயே வந்திருந்தால் ஜெயமடைந்தே யிருப்பாய். ஆயினும் நீ துஷ்டகேதுவை யும் அந்தக் குமாரசிங்கம் பிரபுவையும் ஜெயித்ததேபோது மானது'' என்றாள். இராகவன் “ஆ! என் காதலியே!

நான் எப்போது என் அரியபரிசை யெதிர்பார்க்கலாகும்?'' என்றான்.

இராணி உடனே யொருவித பீதியடைந்து மன நடுக்கமுற்று, “ஆ! இப்போது அதைப்பற்றி கருதலாகாது. இவ்வளவு சீக்கிரத்தில் அந்தப் பிரஸ்தாபமானது அக்கிரமமாகக் கருதப்படும். நான் இராணியாயினும் சுயாதீனமுடையவளல்ல. என்குடிகள் அத்துமீறி நடக்கத் துணியும் குணமுடையவர்களாக விருக்கிறார்கள். அது மட்டுமோ. அந்தப் பயங்கரமான மாயசிங்கன் அரண்மனையில் நடக்கும் விஷயங்களை யெல்லாம் அதிக அக்கரையோடு கவனித்து வருகிறானென்று தெரியவில்லையா? அப்படியின்றேல் நாம் அன்று ஆயுதசாலையில் கண்ட சம்பவங்களெல்லாம் நடந்திரா. அப்பா, கடவுளே! அவற்றை நினைக்குந்தோறும் என் உள்ளம் நடுங்கி என் தேகத்தில் இரத்தவோட்டம் தடைப்பட்டு விடுகிறது. என் குண்டிகாய் குலையாவும் நடுங்கிவிடுகின்றன'' என்றாள்.

இராகவன்:—சே! அதற்காகவா இவ்வளவு பீதியடைகிறாய். அதெல்லாம் தந்திரமேயன்றி வேறில்லை.

இராணி.—அரசன் கவசத்தோடு அறையில் நம்முன் வந்து நின்றது?

இராகவன்:—அதுகூட அவ்வாறே. ஒருவன் அரசன் கவசத்தை யணிந்துகொண்டு வந்தானேயன்றி வேறில்லை.

இராணி:—இருக்கட்டும். ஆனல் என்ன கருத்தோடு அப்படி வந்தான்? ஆ! எனக்கு நன்றாய்த் தெரியும். ஆம். அந்த மாயசிங்கன் நம் மிருவரையும் பிரித்து விடுவான். ஆம் ஆம். அதுவே அவனுடைய எண்ணம் என்று தெரிகிறது.

இராகவன்:—அது ஒருகாலும் அவனால் முடிகிற காரியமல்ல. அதைமட்டும் உறுதியாய் நம்பு.

இராணி:—“ அப்படி யிருந்தாலும் நாம் அவன்கையில் சிக்கிக்கொண் டிருக்கிறோ மல்லவா? அமரநாதன் கொலைச்சங்கதி யவனுக்குத் தெரிந்திருக்கிறதல்லவா? அன்று ஆயுதசாலையில் காட்டப்பட்ட விஷயங்களை நினைத்துப்பார். முக்கியமாய் அமரநாதன் சவம். அந்த...அந்த...பட்டுக்கயிறு ” என்று மிக்க மெதுவாய்க் கூறினாள்.

இராகவன் “ இல்லையில்லை, அவனுக்கு அச்சங்கதி தெரிவதெப்படி ? அக்கயிறு தற்செயலாய் அவனால் உபயோகிக்கப்பட்டது. அது உனக்கு அதிக பயத்தை யுண்டாக்கிவிட் டிருக்கிறது ” என்றான்.

இராணி:—அம்மா ! அந்த மாயசிங்கனை நினைத்தாலும் எனக்கு நடுக்க முண்டாகிறது. அவன் உருவம் என் மனதைவிட்டு நீங்காமலே யடிக்கடி யென்னைப் பயமுறுத்திக்கொண் டிருக்கிறது. ஆயினும் இருக்கட்டும். போகப்போகச் சமயோசிதப்படிப் பார்ப்போம். தகுதியான காலம் வரட்டும்.

இராகவன்:—காலம் போகப்போக மட்டும் வேறென்ன தெரியப்போகிறது ?

இராணி:—அப்படியல்ல. அவனிடம் நாம் எவ்வளவுவரையில் சிக்கிக்கொண் டிருக்கிறோ மென்பதும், அவன் எண்ணந்தான் என்னவென்பது மாவது தெரியும்.

இராகவன்:—அவன் எண்ணம் தெரிந்ததே. அவன் துஷ்டகேது கட்சி. நீ கலியாணம் செய்துகொள்ளாமலேயிருந்தால் எப்படியாவது துஷ்டகேது சிம்மாதனத்திலேறப் பார்க்கலா மென்பதேயாகும்.

இராணி:—அதோடு என்கணவன் கொலைக்காக வஞ்சந் தீர்த்துக் கொள்ள வேண்டு மென்றுங்கூட எண்ண

மிருக்கலாம். ஆ! அந்தப் பட்டுக்கயிறு ஏன் காட்டப்பட்டது?

இராகவன்:—நீ இக்கயிற்றை நினைந்து நினைந்துவீணுகவே திகிற்படுகிருய். அதையுன் அறையில் ஒரு பஞ்சணையின்கீழ் வைத்திருந்தா யல்லவா?

இராணி:—அச்சங்கதி நடந்த அதே அறையில், ஆனால் மறுநாளே நான் பார்த்தபோது அது அங்கில்லை. அப்புறம் நான் மறந்துவிட்டேன். அன்று ஆயுதசாலையில் நடந்த காட்சியில் அதைக் கண்டதே என் மனம் நடுங்கிவிட்டது.

இராகவன்:—"நீ மிரண்டுகொண் டிருப்பது வீண். அது பிறகு எப்படியோ பஞ்சணையி லிருந்து உன்னையறியாமலே கீழே தள்ளி விடப்பட்டிருக்கும். வேலைக்காரி அறையைச் சுத்திசெய்யச் சென்றபோது எடுத்து வெளியி லெறிந்துவிட் டிருப்பாள். அது மாயசிங்கன்கையில் தற்செயலாய்ச் சிக்கவே அவன்தான் ஏற்பாடு செய்திருந்த தந்திரமான ஜாலக்காட்சியில் அதை யுபயோகித்தானே யன்றி வேறில்லை. அதனால் அமரநாதன் கொல்லப்பட்டான் என்ற சங்கதி அவனுக்குத்தெரிய ஒருகாரணமுமில்லை. மாயசிங்கனுக்கு அச்சங்கதி தெரியவே தெரியாது. நீ வீணய் அதற்காகப் பயந்துகொண்டு உன் பிரியம்போல் நடக்கும் விஷயத்தை யாலசியம் செய்யாதே. அந்தக்கயிற்றையும் மாயசிங்கனையும் அடியோடு மறந்துவிடு" என்ருன்.

இராகவன் அவ்வாறு கூறி வாய் மூடுமுன் இராணியுட்கார்ந்திருக்கும் இடத்தின் பின்னுள்ள சுவரின் ஓரமாகக் கூரையிலிருந்து பூமிவரையில் தொங்கவிடப்பட்டிருந்த பட்டுத்திரைச்சீலை கொஞ்சம் விலக்கப்பட்டதும் ஒருகரம்

அச்சந்தின் வழியாக வெளிவந்ததும் அமரநாதன் கழுத்தில் மாட்டப்பட்ட அப்பட்டுக்கயிறு சுருணையாய் எறியப்பட்டது. அது இராணி முதலியவர்கள் தலைக்குமேல் எழும்பிவந்து, அவர்கள் முன் இருக்கும் மேஜையின் மத்தியில் பொத்தென்று விழுந்தது.

இதைக் கண்டதே இராகவன் சொல்லொணு வியப்பும் அச்சமும் கலவரமும் கோபமு மடைந்து துள்ளியெழுந்து போய்த் திரைக்குப்பின் நோக்கினுன். அங்கு இருந்த ஒரு கதவின் பின்பக்கம் அப்போது தான் யாரோ தாளிடும் சத்தம்மட்டும்கேட்டது. அங்கிருந்துதிரும்பி அறையிலிருந்து வெளிப்பட்டுத் தாழ்வாரத்தின் வழியாய் ஓடி பக்கத்திலிருந்த அறையிலும் வேறிடங்களிலும் தேடிப் பார்த்தான். எங்கும் ஒருவரேனும் அகப்படவில்லை. இப்போது நடந்த சம்பவத்தால் தான் கருதியிருக்கிறபடி இராணிக்குப் பொருமை யுண்டாகும்படி செய்தால்கூட அவள் தன்னை மணம்புரியத் துணியாத வண்ணம் அவளுக்குப் பீதியுண்டாய் விட்டிருக்கு மென்று அவன் புத்தியிற்பட்டது.

அவன் கடைசியில் திரும்பிப் போசனம் நடந்து கொண்டிருந்த அறைக்கு வந்தபோது அங்கு எல்லாம் பெருங் குழப்பமாயிருந்தது. ஏனெனில் இராணி அந்தப் பட்டுக்கயிற்றைக் கண்டதும் கோவென்றலறி மரணத்திற் குச்சமதையான மூர்ச்சை யடைந்துவிட்டாள். டாக்டர் சிகிச்சை செய்துகொண் டிருக்கிருர். சித்ராங்கி முதலியவர்கள் உபசாரம் செய்துகொண் டிருக்கிருர்கள். டாக்டர் தங்கவேலுப் பிள்ளைக்கும் சித்ராங்கிக்கும் மட்டும் அப்பட்டு கயிற்றைப்பற்றிய கோரமான சங்கதிதெரியும். மற்ற பேருக்கெல்லாம் ஒன்றும் தெரியாதபடியால் அந்தச்சாதாரணமான கயிற்றைக் கண்டமாத்திரத்தில் இராணிக்கு

அத்தகைய மனவேதனை யுண்டானது சொல்லொணு வியப்பாக விருந்தது. ஆனுல் இதில் ஏதோமர்மம் இருக்க வேண்டுமென்றுமட்டும் அவர்கள் மனதிற்பட்டது. ஆங்காங்கு சிறு கூட்டங்களாகப் பிரிந்து குசுகுசு வென்று பேசிக் கொண்டார்கள். கடைசியில் ஒரு தீர்மானம் செய்து கொண்டார்கள். அதாவது முன்னமே இராணியின் நடக்கைகளைப் பற்றி மிக்க பிரஸ்தாபம் உண்டாகியிருக்கிறது. ஆகையால் இச்சங்கதி நமக்கு விளங்காதவரையில் இதைப்பற்றி யொருவருக்கும் கூறுமல் இதையிப்படியே மறைத்து விடுவதென்று தீர்மானித்துக் கொண்டு அவரவர்கள் தத்தம் வாசஸ்தலங்களுக்குச் சென்ருர்கள். இராணியும் அவளுடைய படுக்கை யறைக்குக் கொண்டு போகப்பட்டாள். இராகவன்சற்றுநேரம் அங்கேயிருந்து யாவர்க்கும் இராணியின் மூர்ச்சைக்கு ஏதோ ஒருகாரணங்கூறிவிட்டு, யாவரும் சென்றபின்பு துரிதமாய் இராணியின் சயன அறையை நோக்கிச் சென்ருன். கயிறு அறையில் விழுந்தவுடன் தான் எழுந்துசென்றது முதல் மறுபடிதிரும்பி அறைக்கு வருந்தனிலும் அங்கு நடந்த சங்கதி என்னென்றறிய அவன் மிக்க ஆவலுள்ளவனுகவிருந்தான்.

ஆனுல் அவன் இராணியின் அறையருகிற் செல்லும் போது சித்ராங்கி அங்கிருந்து வெளியிலுள்ள தாழ்வாரத்தில் பிரவேசிப்பதைக் கண்டான். அவள் தன் மூக்கின் மேல் விரலைவைத்துப் பேசாமலிருவென்று சமிக்கை செய்துவிட்டுத் தயவுசெய்து இப்படிவா என்று ஜாடையாய்க்கூறித் தன் அறையைநோக்கி நடந்தாள். இராகவன் அவள் பின்னுலேயே சென்ருன். "ஓகோ! நாம்கொண்டிருக்கும் கருத்திற்கு இது மிக்க அநுகூலமே" யென்று மனதில் நினைத்துக் கொண்டான். சித்ராங்கி தன் படுக்கை

யறைக்குள் அவனையழைத்துச் சென்றதும் மெதுவாய்க் கதவை மூடிக்கொண்டு அவனையொரு பட்டுச்சோபாவின் மேல் உட்காரச்செய்து, அவன் சமீபத்தில் உட்கார்ந்து காதற்பார்வையோடும் மலர்ந்த வதனத்தோடும் புன்னகையோடும் அவன் முகத்தை உற்றுநோக்கி, "நான் இவ்வாறு தங்களை என் படுக்கையறைக் கழைத்து வந்தது ஒழுங்கீனமென்று கருதுவீர்கள் போலும்" என்றாள்.

இராகவன்:—"ஆ! அழகே உருவமெடுத்தது போன்ற கன்னிகையே! நான் ஒருபோதும் அப்படி நினைக்கவே மாட்டேன். நாம் நெடுநாளாக நண்பர்களாக விருப்பவர்களல்லவா! மேலும் இருவரும் இராணியின் க்ஷேமத்தில் கண்ணேக்கம் வைத்து நடந்து கொண் டிருப்பவர்க ளல்லவா? அப்படியிருக்க உன் விஷயத்தில் நான் ஒன்றை ஒழுங்கீன மென்றுகூடக் கருதுவேனே. நீயவ்வாறு என்னை நினைப்பதை நோக்க நான்விசனிக்கிறேன். தயவுசெய்து இராணி என்ன நிலைமையில் இருக்கிறு ளென்பதைக் கூறு" என்றான்.

சித்ராங்கி "இராணி மன உறுதியுடையவள். சீக்கிரத்தில் சுகமடைவாள். ஆயினும் சற்றுநேரம் தனியே நிம்மதியோடிருக்கவேண்டுமென்பது இராணியின் விருப்பம். உமக்கு அவகாசமிருந்தால் ஒரு மணி நேரம் நாம் சம்பாஷித்துக்கொண்டிருக்கலாம்" என்றாள்.

சித்ராங்கிக்கு அவனை வசப்படுத்தவேண்டுமென்று எண்ணம். இராகவனுக்கு அவளைத் தனக்கிணங்கும்படி செய்யவேண்டுமென் றெண்ணம். அத்தகைய எண்ணமுடைய ஒரு வாலிபனை மாயஜாலங்கற்ற சித்திராங்கி மயக்குவது ஒருபெரிய காரியமல்ல. ஆகையால் இருவரும் சற்றுநேரம் அன்பார்ந்த வார்த்தைகளால் சம்பாஷித்த

பின் இராகவன் அவளை நோக்கி "புண்ணியகோடிப்பிரபு நான் இங்கு வருவதை யறிந்தால் உன்மேல் மனஸ்தாபம் கொள்ளமாட்டானா?" என்றான்.

சித்ராங்கி:-அவன் மனஸ்தாபத்தைப்பற்றி யெனக்கக்கறையில்லை. அவனுக்கு என் காதல் முழுமையும்தானே அனுபவிக்கவேண்டுமென்ற பேராவல்தான். ஆனால் அதோடு அவன் பேராசை இன்னும் பெரிய அந்தஸ்திலிருக்கும் மாதின் காதலைப் பெறவேண்டுமென்றிருக்கிறது. அப்போது அவன் எனக்குத் துரோகம் நினைத்தவன் தானே. ஆகையால் எனக்கு அவன்மேல் வெறுப்புண்டாவது சுபாவம்தானே.

இராகவன்:—அப்படியானால் அவன் இராணியை மணம் புரிய எண்ணியிருக்கிறானா?

சித்ராங்கி:—"ஆம், அதுதான். ஆகையால் அவன்மேல் எனக்கிருந்த காதல் முழுமையும் வெறுப்பாய் மாறி விட்டது" என்றாள்.

இராகவன் தன் மனதிலிருந்த பொறாமை கோபம் யாவும் மறைத்துக்கொண்டு "ஆனால் இராணி அவன் பிரியத்திற்கு இடங்கொடுத்திருப்பாளென்று நீ கருதுகிறாயா? எப்போதேனும் அவ்வாறு செய்கையில் காட்டிக் கொண்டிருப்பாளோ?

சித்ராங்கி:—ஆ! நான் அதை யெல்லாம் கூறினால் உன் மனதிற்கு மிக்க வியாகூலம் உண்டாகும்" என்று, தான் கூறுவதற்கு மனமில்லாதவள்போல் இயம்பினாள்.

இராகவன்:—ஆ! நீ தயவுசெய்து உனக்குத் தெரிந்திருக்கும் யாவும் நீ எனக்குக் கூறவேண்டுகிறேன். அப்படிச் செய்தால் நீ எனக்குப் பெரிய உதவி செய்ததாகும். நான் அதை யொருபோதும் மறக்கமாட்

டேன். அதற்கு மாருக உன்னை மிக்க விசுவாசத்தோடு நேசிப்பேன்.

சித்ராங்கி:—அய்யா! அப்படிக் கூறமாட்டேன். நான் உனக்காகக் கூறினுல் நீ அச்சங்கதிகளைக் கேட்டதே மிக்க வெறிகொண்டு புண்ணியகோடிப் பிரபுமேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ள ஆத்திரப்படுவாய். பிறகு வீண் விபரீதங்கள் நடப்பதோடு நான் உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்ததன் பலனுக அழிக்கப்படுவேன்.

இராகவ:—இல்லை யில்லை. நான் அப்படி யொன்றும் செய்வதில்லை. நீ, நான் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று கூறுகிறுயோ அப்படியே நடந்து கொள்வதாய்ச் சத்தியம் செய்கிறேன்.

சித்ராங்கி.—ஆ! நீ அப்படிச் சத்தியம் செய்வதாயின் கூறுகிறேன். ஆயினும் அப்போது என்னையே மிக்க இழிவாய் நினைத்துவிடுவாய். ஓ! நான் உன்னை விரோதியாகச் செய்து கொண்டதாகும்.

இராகவன்:—இல்லையில்லை. ஒருகாலும் அப்படி நினைக்க மாட்டேன். நான் யாரேனும் ஒருவரைக் காதலித்திருக்கவேண்டும். நீ மட்டும் இராணி எனக்குத் துரோகமான எண்ணங்கொண் டிருக்கிறதாய் எனக்குப் புலப்படும்படிச் செய்வாயேல் உடனே நான் உன்னையே காதலிப்பேன்.

சித்ராங்கி:—ஆ! நான் மட்டும் இதைப் பூரணமாய் நம்பக் கூடுமாயின் உன் பிரியப்படி நடக்கத் தடையே யிராது.

இராகவன் அவள் அருகிலிருந்து அவளோடு பேசப் பேச, முன்பு வஞ்சந் தீர்த்துக்கொள்ள அவள்மேல் காதல்கொள்வதென்று எண்ணியதை மறந்து, அவள்

மாயவலையில் சிக்கி மயங்கித் தன்னை மறந்து அவள்மேல் காதல் கொண்டவனாகி, அவளை நோக்கி மிக்க ஆத்திரத்தோடு "இல்லை யில்லை, நான் சத்தியமாகவே கூறுகிறேன். என் கண்களுக்கு நீ இராணியைவிட மிக்க இனிமையான வனப்புடையவளாக விருக்கிறாய். இப்போதுதான் மனம் உண்மையாகவே உன் காதலுக்கு அடிமையாகிறது. நீ யாவும் எனக்கு அச்சமின்றிக் கூறலாகும். நான் உன் பிரியத்திற்கு மாறாக நடக்கமாட்டேன்" என்றான்.

சித்ராங்கி:—"ஆ! இப்போதுதான் நான் பேரானந்தமடைகிறேன். இனி நான் கூறுவதைச் சாந்தமாகக் கேள். இராணி நீ யில்லாதகாலங்களில் அவனிடம் அன்போடு சிரிப்பதும் வார்த்தையாடுவதுமாயிருக்கிறாள். புண்ணியகோடிப் பிரபுவும் தாராளமாய்க் கூட நகைப்பதும் சரசமாய்ப் பேசுவதும் தாராளமாய் நடக்கின்றன. அவன் காதற் கவிகளெழுதி இராணியிடம் கொடுத்ததை நான் ஜாடையாய்ப் பார்த்துக்கொண் டிருந்தேன். இராணி சோபாவில் உட்கார்ந்திருக்கும்போது அவன் அவளருகிலுட்கார்ந்து காதற் பாட்டுகள் பாடுகிறான். இவ்வளவென்ன, அவன் இராணியிடம் தன் காதலை வெளியிட்டிருக்கிறான். அவள் அவன் வார்த்தைகளை நம்பிக்கொண்டிருக்கிறாள். அவன் மனப்பூர்வமாய் இராணியை நேசிக்கவில்லை. அவள் அந்தஸ்தைக் கருதித் தான் அவளை மணந்து கொண்டால் அரசனாய்விடலா மென்பதற்காகக் காதல்கொள்பவன்போல் அபிநயம் செய்கிறானே யன்றி வேறில்லை. இராணி தன் இரகசியக் கடிதங்களை யெல்லாம் தனது விலை யுயர்ந்த நகைகள் வைக்கும்

பெட்டியில் வைத்திருக்கிறாள். நான் அப்பெட்டியைத் திறந்து பார்த்து, அதிலிருந்த புண்ணிய கோடிப் பிரபுவின் கடிதங்களையெல்லாம் வாசித்துப் பார்த்து உண்மையான சங்கதிகளை யறிந்துகொண்டேன். அவன் இராணியின்மேல் உண்மையான காதல் கொண்டிருந்தால் என்ன போகட்டுமென்று அலட்சியமாய் அதைப்பற்றிக் கவனிக்கவேமாட்டேன். அவனுடைய கபடத்தனமான துரோக சிந்தனையாலேயே எனக்கு அவன்மேல் பூரண வெறுப்புண்டாகிவிட்டது.'' என்றாள்.

இராகவன் "ஆ! இதைப்பற்றி எனக்கு மட்டும் தக்க அத்தாக்ஷியகப்பட்டால்...'' என்றதே சித்ராங்கி, "அகப்பட்டால் என்ன செய்வாய்?'' என்று கேட்டாள். இராகவன் "அகப்பட்டால் நான் என் காதல் முழுமையும் உன் மேலேயே யென்றும் வைத்துவிடுவேன்'' என்றான். சித்ராங்கி "ஆ! உன் வார்த்தை யெனக்கு என்று மறியாப் பேரானந்தத்தை யுண்டாக்குகிறது. புண்ணிய கோடிப்பிரபு இராணிக்குத் தன் காதலை வெளியிட்டான். அவள் அதைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டாள். இருவரும் ஒருவரை யொருவர் காதல் பார்வையால் நோக்கிக்கொண்டதை நான் அருகிலிருந்தே பார்த்திருக்கிறேன். அவர்களுக்குள் இரகசியமாகக் கடிதப்போக்கு வரத்து நடக்கிறது. அக்கடிதங்களில் சிலவற்றையும் நான் பார்த்தேன். இவற்றால் என் மனதில் உண்மை புலப்பட்டுவிட்டது. ஆகிய இவை யாவும் உனக்குக் கூறியிருக்கிறேன். இன்னும் என்ன அத்தாட்சி வேண்டுமென்கிறீர்?'' என்றாள். இராகவன் "ஆம் யாவும் கூறினை. ஆயினும் ஒரு அத்தாட்சி மட்டும் பிரத்தியட்சமாய் நான் காணும்படி செய்துவிட்டால் என் மனதில் உறுதியேற்

பட்டுவிடும். ஏனெனில் கொஞ்ச நேரத்திற்கு முன்பு இராணி அவனை தேசப்பிரஷ்டம் செய்து விடுவதாய்க் கூறினளே யென்பது எனக்குக் கலவரத்தை யுண்டாக்கு கிறது" என்றான்.

சித்ராங்கி இதைக்கேட்டதும் சற்றேனும் யோசனை யாவது தடுமாற்றமாவது இல்லாமல், விசனமும் வியப்பும் அடைந்தவள்போல் அபிநயம் செய்துகொண்டு, அவனை யுற்று நோக்கி.

"அந்தோ! இவ்வளவுதானு உன் சூக்குமபுத்தி! இந்த அற்பவிஷயம் உன் புத்திக்குப் புலப்படவில்லையா? இராணி சமத்காரமாய் அவனைத் தேசப்பிரஷ்டம் செய்து விடுவ தாய் வெளிக்குக் காட்டிக்கொண்டாளேயன்றி வேறில்லை. அது உண்மையென்றே நீ யெண்ணிக்கொண்டாயோ? பேஷ். ஆடவர் சாமார்த்தியம் இவ்வளவேதான். அப்படிக் கூறினல் அதைச் செய்யவேண்டாமென்று தடுத்துக்கூற ஆட்கள் அருகிலிருக்கிறார்களென்று இராணிக்கு நன்றாய்த் தெரியும். இராணியின் மனோபாவங்களை யெல்லாம் தங்க வேலுப்பிள்ளை நன்கறிவார். இராணி அவ்வாறே கூறி யதே அவர் அப்படிச் செய்யக்கூடாதென்பதற்குத் தக்க காரணங்களைக் காட்டிவிட்டதோடு, உன்னை யெவ்வாறு தந்திரமாகப் புகழ்ந்துகூறி நீயே யவனுக்காக மன்னிப்புக் கேட்கும்படி செய்துவிட்டார் பார்த்தாயா! இவ்வள வேன்? இராணிக்குப் புண்ணியகோடிப் பிரபுவின்மேல் அன்பும் அவன் விஷயத்தில் நன்றியும் இருப்பதற்குத் தக்க காரணமிருப்பதை நீ கவனிக்கவில்லை போலும். அவளுக்கு வெறுப்பாகவிருந்த கணவனை யொழித்துவிட நடந்த முயற்சியில் உயிருக்குத் துணிந்து முதல் அதில் பிரவேசித்தவன் புண்ணியகோடிப் பிரபுதானே. மேலும் அவன் புராதனமான கௌரவம்பொருந்திய பிரபு வமிசத்

திற் பிறந்தவன். அழகிலும் வீரத்தன்மையிலும் செல்வத்திலும் குறைந்தவனல்ல. இராணி யுன்னை மணம் செய்து கொள்வதெனின் சந்தர்ப்பம் பார்த்துக் குடிகளும் மற்றையோரும் அதற்குச் சம்மதிக்கச்செய்து மணம் செய்து கொள்ளவேண்டும். அது கஷ்டத்தின்மேல் ஆகவேண்டிய காரியம். புண்ணியகோடிப் பிரபுவை மணம் புரியவேண்டுமாயின் ஒரு அச்சமுமின்றி நாளைக்கே வேண்டுமாயினும் அதைப் பிரஸ்தாபித்துச் சுலபமாகக் காரியத்தை முடித்துக்கொள்ளலாகும். ஓ பிரபுவே! நீர் தைரியசாலியாகிய சுத்த வீரசிங்கம் என்பதில் ஒரு சந்தேகமுமில்லை. ஆனால் ஒரு ஸ்திரீயின் கபடவஞ்சமான தந்திரத்தோடு யுத்தம் செய்யும் ஆற்றல் உன்னிடமில்லை" என்றாள்.

நேயர்களே! இராகவன் மட்டும் அவள் கூறிய கடைசி வார்த்தைகளை ஆயுதமாகக்கொண்டு அவளையே தாக்கினால் மிக்க புத்திசாலித்தனமாக நடந்துகொண்டவனாவான். அந்தோ! தான் செய்வதே மிக்க அக்கிரமும் அயோக்கியமுமான காரியமாகவிருக்க அதை யுற்றுணராது பிறன்மேல் உண்டான சந்தேகத்தாலேயே பொறாமையும் கோபமும் வஞ்சமும் குடிகொண்ட மனதையுடையவனுக்கு அத்தகைய யோசனை யெவ்வாறுதிக்கும்? ஆகையால் அவன் சித்ராங்கியை நோக்கி மிக்க ஆத்திரத்தோடு "ஆகா! என்ன மூடனாகிவிட்டேன். சுத்தக் கண்மூடிப் பயல்போலல்லவோ சிந்தித்து விட்டேன். இப்போது யாவும் நன்றாய் விளங்கிவிட்டன. புண்ணியகோடி எப்படி இராணியை மனைவியாகக்கொண்டு உன்னையும் வைப்பு மாதாகக் கொண்டிருக்க எண்ணியிருக்கிறானோ அவ்வாறே இராணியும் பிரபு வமிசத்தில் பிறந்த செல்வவந்தனாகிய புண்ணியகோடிப் பிரபுவைக் கணவனாகவும் என்னைச் சோரநாயகனாகவும் செய்துகொள்ளத் தீர்மா

னித்துவிட்டாள். ஆ! இருக்கட்டும். இப்போது மனம் விட்டு உன்னிடம் கூறுகிறேன் கேள். இராணி யென்ற பதவிக்கும் போகபாக்கியத்திற்கும் விருப்பம் வைத்து அவள்மேல் நான் காதல் கொண்டதாக நடந்துகொண் டேனே யன்றி அவள் ஒரு சாதாரண குடும்பத்திற் பிறந் தவளாக விருந்திருந்தால் அவளை யேறெடுத்துகூடப் பார்த்திருக்க மாட்டேன். ஆனால் என் கல்போன்ற மனதை யுன்னுடைய அதிசயமான வனப்புமட்டுமே கவர்ந்துகொண்டு தனக்கு என்னை யடிமையாக்கிக்கொண் டது. உன்மே லுண்டாயிருப்பதே உண்மையான காதல் என்று எனக்கு நன்றாய்த் தெரிகிறது. ஆ! நீ மட்டும் எனக்கு நான் கோரியபடி ஒரு அத்தாட்சி காட்டிவிட் டால் உன்னையே பெண் தெய்வமாகக் கருதுவேன். என் காதல் முழுமையும் உன்னுடையதேயாகும். இப்பே ருதவி மட்டும் நீ யெனக்குச் செய்யவேண்டும். என்மே லுனக்குப் பூரணமான காதல் இருக்கிறதென்பதற்கு அது அத்தாட்சியுமாகும்'' என்றான்.

மாயஜாலக்காரியாகிய சித்ராங்கி மிக்க தந்திரமாக நடித்து "நீ கூறிய விஷயங்களில் ஒன்றைக்கூட நான் யாரிடமும் வெளியிடுவதில்லை'' என்று இராகவன் பிரமா ணம் செய்யும்படி செய்து அதன்பின்பவனை நோக்கி, "ஆ! நீ எப்படியோ சாமார்த்தியமாய் என்னை யடி யோடு உன் வலையிற் சிக்கச் செய்தாய். உன்மேல் எனக் குண்டாயிருக்கும் அளவுகடந்த காதல் உன் கோரிக்கை யெதுவாயினும் அதை நிறைவேற்றும்படி என்னைப் பல வந்தப் படுத்துகிறது. ஆம் அப்படியே செய்கிறேன். நாளை முழுமையும் நீ யுன் அறையிலேயே யிரு. உன் அந்தரங்க ஆளாகிய அழகப்பன் என்னிடம் ஆயத்தமாக விருக்கும்படி கட்டளைசெய். நான் எந்த நிமிடம் அவன்

மூலமாய்ச் சங்கதி யனுப்பினுலும் அதன்படி நடந்து கொள்" என்ருள்.

இராகவன் மிக்க சந்தோஷமடைந்து அவளுக்கு அன்பார்ந்த மொழிகளைக் கூறினுன். அச்சமயம் இராணி தன்னிடம் காட்டிய முழு அன்பையும் அவள் பன்முறை மொழிந்த உறுதிமொழிகளையும் அடியோடு மறந்ததோடு தான் அன்று தீர்மானித்த சித்திராங்கிமேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற உறுதியையும் மறந்து, அவள் வனப்பிற்கும் இந்திரஜால நயவஞ்சக மொழிகளுக்கும் மயங்கி அவளுக்கடிமையே யாகிவிட்டான்.

36-வது அத்தியாயம்.

சித்ராங்கி இராணியைக் காணல் — சித்ராங்கியின், கபட வஞ்சகச் செயல்—இராணி புண்ணியகோடிப் பிரபுவின் அறைக்குச் செல்லல்—இராகவனுடைய விபரீத நடக்கை—மிக்க ஆச்சரியமான சம்பவங்கள்— மாயசிங்கன் சமயத்தில் இராணியைக் காப்பாற்றல்.

மறுநாள் காலை சுமார் ஏழு மணிக்குச் சித்ராங்கி சந்தடி செய்யாமல் இராணியின் சயன அறைக்குள் நுழைந்தாள். இராணி அப்போதுதான் விழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிருள். அவள் முகம் மிக்க வாட்டமடைந்து மனம் திகிற்பட்டுக்கொண்டிருந்தது. முன் இரவு நேர்ந்த கயிற்றைப்பற்றிய சம்பவத்தாலுண்டான பீதி யின்னும் அவள் மனதைவிட்டு நீங்கிலது. சித்ராங்கி இராணியினருகிற்சென்று மிக்க அன்பார்ந்த இனிய வசனங்களால் " மகாராணி சுகவீனமாக இருப்ப

தாய்த் தெரிகிறது. தாங்கள் வியாகூலப்படுவதற்கு ஒரு காரணமுமில்லையே. தங்களுக்கு என்ன குறைவிருக்கிறது. யாரோ துஷ்டர் சூதாய் அக்கயிற்றை யெறிந்த அற்ப விஷயத்திற்காகத் தாங்கள் கலவரமும் துயரமுமடைவது எனக்கு மிக்கவியப்பாகவிருக்கிறது'' என்றாள்.

இராணி, சித்ராங்கி உண்மையாகவே தன் மேல் பூரண அன்பு வைத்திருப்பவளென்று நம்பியிருக்கிறாள். ஆகையால் அச்சமயம் அவளைக் கண்டதாலேயே இராணி சற்று மனத்தேறுதலடைந்து "ஆ! சித்ராங்கி! உன்மன உறுதிபோல் எனக்கிருந்தால்...'' என்றதே, சித்ராங்கி "மகாராணி எங்களைவிட மிக்க உறுதியும் தைரியமுமான மனமுடையவர்களாயிற்றே. தாங்கள் இத்தகைய விஷயத்தை மிக்க சுலபமாகப் பொறுத்துக்கொள்ளலாமே. மேலும் மகாராணி! இவ்வுலகத்தில் விசனத்தை யனுபவிப்பது தாங்கள் ஒருவர்மட்டுமே யென்று கருதுகிறீர்கள்?'' என்று மிக்க இரக்கமாக அதிவினயத்தோடு வினவினாள்.

இராணி:—"ஆ! நான் அப்படி நினைக்கும் அறிவிலியல்ல. ஆதலினாலேயே இச்சமயம் யாரேனும் துயரமுறுவோர் இருந்தால் அவர்கள் துயரத்தை நீக்கிவிடின் என் மனவேதனைக்கு அதுவே யொரு ஔஷதம் போலாகும்'' என்றாள்.

சித்ராங்கி மிக்க இரக்கத்தோடு "மகாராணி அப்படிப்பட்ட ஒரு ஆள் இந்த அரண்மனையிலேயே யிருக்கிறான். அவன், தாங்கள் அவனை யடியோடு வெறுத்துவிட்டதாக நம்பி உள்ளமும் உடலும் உருகி உருகிச் சீக்கிரத்தில் சுடலைபோய்ச் சேர்ந்து விடுவான்போ லிருக்கிறது. தாங்கள் கொஞ்சம் இரக்கம் காட்டாவிடின் அவன் மடிவது நிச்சயம்'' என்றாள்.

இராணி இவள் புண்ணியகோடிப் பிரபுவைப்பற்றியே

கூறுகிருளென்றுணர்ந்துகொண்டு "ஆ! புண்ணியகோடிப் பிரபுவின் மனதில் அவ்விஷயம் அவ்வளவுதூரம் ஊடுருவி விட்டிருக்கிறதா? என் ? ஒருசமயம் நீ கூறுவது முழுதும் உண்மையாகவே யிருக்கலாகும் என்று கருதுகிறேன்" என்றுள்.

சித்ராங்கி:—"மகாராணி! ஒரு நாளில் அவன் முகத்திலுண்டாயிருக்கும் மிக்க கோரமான மாறுதலைத் தாங்கள் கண்டால் மிக்க பரிதாபப்படுவீர்கள். தாங்கள் அவனைத் தேசப்பிரஷ்டம் செய்தது அவனுக்குத் தெரியும். பின்னுல் தாங்கள் மன்னிப்பு அளித்தாலும் தங்களுக்குண்டான வெறுப்பே அவன் மனதில் சகிக்கொணுத வேதனையாகிவிட்டது. நான் தங்களிடம் இரகசியமாகக் கூறுகிறேன். இந்த மனோவேதனையைச் சகிக்கமுடியாமல் சீக்கிரத்தில் அவன் தற்கொலை புரிந்துகொள்ளவே யுத்தேசித்திருக்கிருன். அந்தோ! அவன் கண்ணீரை ஆருய்ப்பெருக்கிக்கொண்டு இதைப்பற்றிப் பிரலாபிப்பதைக் கண்டபோது என் மனம் சகிக்கமுடியாத வேதனை யடைந்துவிட்டது. உண்மையாகவே அவன் தங்கள் விஷயத்தில் பூரண விசுவாசமுடையவன். தங்கள் க்ஷேமத்திற்காகத் தன் பிராணனைத் தத்தம் செய்ய ஆயத்தமாக விருப்பவன். முன்னமே தங்களுக்காக பாபத்திற்கும் உயிருக்கும் துணிந்தவனல்லவா?" என்று மிக்க பரிதாபத்தோ டியம்பினுள்.

இராணி யியற்கையில் இரக்கமுள்ளதும் நன்றி மறவாத்தன்மையுமான மனமுடையவள். அமரநாதன் கொலையில் புண்ணியகோடிப் பிரபுவே முதலில் துணிந்து பாய்ந்து அவனைப் பிடித்ததையும் அவர்களிருவரும் சண்டை பிடித்தபோது டாக்டரும் பத்மநாயகியும்

அவன் உதவிக்குவந்து கயிற்றைப் பிடித்திழுக்கு முன் இரண்டொரு விநாடி அப்பிரபு பிராணபத்தில் சிக்கிக் கொண்டதையும் இராணி மறந்து விடவில்லை. ஆகையால் சித்ராங்கியை நோக்கி, "ஆம் ஆம். புண்ணியகோடிப் பிரபு செய்திருக்கும் உதவியை நான் மறந்து விடவில்லை. அவர் விஷயத்தில் நன்றிபாராட்ட நான் கடமைப்பட்டவளே" என்றாள்.

சித்திராங்கி தன் கபட எண்ணம் சுலபமாகவே கைகூடுமென்று உள்ளத்தில் சந்தோஷமடைந்து இராணியை நோக்கி "மகாராணி! அவன் தங்கள் கருணைக்குப் பாத்திரவானே. மேலும் நேற்று நடந்த விஷயத்திற்காக அவன் தங்கள் கோபத்திற்குப் பாத்திரவானாகவில்லையென்றே கூறலாகும். ஏனெனில் இராகவப் பிரபு எவ்விதத்தானும் நித்திரை மயக்கம் தெளிந்து எழுந்திருப்பவராகத் தோன்றாததால் மூன்றாவது நாள் இராணியின் மேல் குற்றம் கூறவருகிறவனோடு யுத்தம்செய்து இராணியின் நிரபராதத் தன்மையையும் கீர்த்தியையும் நிலைநாட்ட இராணியின் பட்சம் ஒரு வீரன் இருக்கவேண்டுமென்று கருதியே அவன் அவ்வாறு செய்ததன்றி வேறில்லை. நாம் இப்போதே நம்மை வெளிப்படுத்தாமல் மர்மமாகவேயிருந்து, அப்படி யாரேனும் வந்து யுத்தத்தில் நாம் ஜெயமடைந்தால் அப்போது நம்மை யின்னானென்றறிவித்து இராணிக்கு ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் விளைவித்து இராணியின் அன்பைப்பெறலாம் என்று ஆவல்கொண்டதுகூட ஒரு குற்றமாகுமோ? மகாராணி! அவன் தங்கள் பரிதாபத்திற்கும் கருணைக்கும் பாத்திரவானேயன்றிக் கோபத்திற்குப் பாத்திரவானானவென்பது தங்கள் மனதிற்கே யிப்போது நன்கு விளங்குமென்று நம்புகிறேன்." என்றாள்.

இவள் தந்திர சாமார்த்தியமான மொழிகளைக்கேட்ட இராணி இவள் கூறுவது மனப்பூர்வமான விஷயமே யென்று நம்பிப் புண்ணியகோடிப்பிரபு விஷயத்தில் மனங் கனி வெய்தி, "சித்ராங்கி! என் அன்பார்ந்த சினேகியே! நீ கூறியது உண்மையே. நான் செய்தது பெரிய தவறேயாகும். புண்ணியகோடிப் பிரபு விஷயத்தில் நான் மிக்க அநீதமாகவே நடந்துகொண்டேன். அவருக்கு நான் நன்மைக்குப்பதிலாகத் தீமையே செய்துவிட்டேன்" என்று மிக்க மனக்கசிவோடு மொழிந்தாள்.

சித்ராங்கி "மகாராணி! அவன் தங்கள் விஷயத்தில் கொண்டிருக்கும் பக்தி விசுவாசம் அளவு கடந்தது. ஆம் நான் மனம் விட்டுக் கூறுகிறேன். அவன் தங்களை யொரு தேவதையாகக் கருதியே தன்னுடைய மனமாகிய ஆலயத்தில் ஸ்தாபித்துப் பூசிக்கிறான். அது விஷயத்தில் நான் எள்ளளவேனும் பொறாமைப்படுகிறேனென்று தாங்கள் கருதவேண்டாம். ஏனெனில், தங்களுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்குவதே எனக்குச் சந்தோஷம். தங்கள் மனோபீஷ்டமே என் சிந்தனையாகும். தங்கள் விருப்பத்தை நிறைவேற்ற நான் எதை வேண்டுமாயினும் இழக்கச் சித்தமாக விருக்கிறேன். தங்கள் வாக்கால் அப்பரிதாபமான பிரபுவிற்கு மன்னிப்புக் கூறினால், அவன் மனோவேதனை நீங்கி உயிர் வாழ்வான்" என்றாள்.

இராணி அவ்வஞ்சகக் காரியின் மொழிகளை யெல்லாம் உண்மையென்றே நம்பிக்கொண்டு, "ஆ. நீ உண்மையான சினேகியென்று நான் அறிவேன். புண்ணியகோடிப் பிரபுவை வந்து பார்க்கிறேன். ஆனால் இரண்டொரு நிமிடங்களே அங்குத் தங்கியிருக்கலாகும். அதுவும் மிக்க இரகசியமாக நடக்கவேண்டும். எதற்கும் நீ கூடவே வரவேண்டும்" என்றாள்.

சித்திராங்கி தன் எண்ணம் நிறைவேறி விட்ட தென்று மிக்க சந்தோஷமடைந்து, இராணிக்கு மிக்க இனிமையான மொழிகளால் வந்தனமளித்து முகஸ்துதி செய்தாள். அதன் பிறகு இராணி யெழுந்து உடுத்திக் கொண்டாள். இரண்டொரு நிமிடங்கள் கழித்துப் பத்ம நாயகியும் அங்குவந்தாள். அதன்பிறகு மூவரும் போசன மருந்தினார்கள். போஜனம் முடிந்தபின் பத்மநாயகி தன் னறைக்குச் சென்றாள். சித்ராங்கி அங்கிருந்து துரித மாய்ப் புண்ணியகோடிப் பிரபு விடம் சென்று இராணி யவனிடம் வருவதைப்பற்றி அவனுக்கு எச்சரிக்கை செய்துவிட்டு அங்கிருந்து திரும்பிவந்து நேராய்த் தன் அறைக்குச் சென்று இராகவனுக்கு ஒரு கடிதம்வரைந்து அவன் வேலைக்காரனிடம் அனுப்பிவிட்டுத் தனக்காக ஆவலோடு எதிர் பார்த்திருக்கும் இராணியிடம் சென்றாள். அப்போது இராணி உடுத்திக்கொண்டு ஆயத்தமா யிருந் தாள்.

அரைமணி நேரங்கழித்துச் சித்ராங்கி வெளியில் சென்று திரும்பிவந்து "மகாராணி! வழியில்யாருமில்லை" என்றாள். இராணிக்குத் தான் செய்யப்போவது தவறான காரியமென்றும், சித்ராங்கியின் பிரியப்படி நடப்பது இராகவனுடைய கோபத்தைக் கிண்டிவிடத் தக்கதென் றும் தெரியும். ஆனால் ஆதிமுதல் அவள் தன் சகவாசத் தால் பெற்ற நடவடிக்கையும் மன நிலைமையும் அவளை நேர்வழியில் உறுதியாய் நிற்கச்செய்யக் கூடியவைகளா யில்லை. ஆகையால் அவள் சித்ராங்கியோடு கூடப் புண்ய கோடியின் அறைக்குச் சென்றாள்.

இருவரும் அந்த அறையின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றதும் கதவு மறுபடி மூடப்பட் டது. அந்த அறைக்கு நேராய்ச் சற்று தூரத்திலுள்ள

ஒரு இருளடைந்த மூலையில் இராகவன் ஒளிந்துகொண்டிருந்தான். இராணியின் துரோக நடக்கையைக் கண்டதே அவன் மனதில் அடக்க முடியாத கோதிப்புண்டாயிற்று. ஆனல் மிக்க கஷ்டத்தோடு அதை யடக்கிக் கொண் டிருந்தான்.

புண்ணியகோடிப் பிரபு மிக்க முகவாட்டத்தோடிருந்தாலும் இராணியின் வருகையைக் கண்டதும் சந்தோஷமடைந்து அவள் அருகில்வந்ததே வந்தன மளித்தான். இராணி "பிரபுவே! உனது பிரியப்படி நான் உன்னை மன்னித்ததாய் நேரில் கூறவந்தேன்—நீ ஒருசமயம் குற்றம் செய்திருந்தால்—" என்ருள்.

புண்ணியகோடிப் பிரபு:-"ஆ! மகாராணி! தங்கள் வாக்கில் நின்றும் இத்தகைய குளிர்ந்த மொழிகளைக்கேட்பது எனக்கு எவ்வளவோ ஆனந்தத்தை விளைவிக்கிறது" என்று கூறிக்கொண்டே இராணி நீட்டிய கரத்தைப் பற்றி முத்தமிட்டுக் கொண்டான்.

இராணி அவனருகில் உட்கார்ந்து "பிரபுவே! நீயேன் இத்தகைய துயரமடைய வேண்டும்? நான் மன்னித்து விட்டசங்கதி யுனக்குத்தெரியும். நீ யுத்தத்தில் தோல்வியடைந்ததைப் பற்றி அகௌரவமாய் நினைக்க வேண்டிய காரணமேயில்லை. எத்தனை யுத்தங்களில் பிரசித்தி பெற்ற தளகர்த்தர்களை யெல்லாம் நீ ஜெயித்திருக்கிறுய். எப்படிப்பட்ட சூரனும் ஒவ்வொரு சமயம் தோல்வியடைவதுண்டு. அதனலேயே அவனுடைய வீரத்தன்மையைப் பற்றி ஒருவரும் சந்தேகிக்க மாட்டார்கள். அப்படியிருக்க நீயேன் விசனப்பட வேண்டும்." என்ருள். புண்ணியகோடிப்பிரபு மனக்களிப் படைந்து "மகாராணியே! தங்கள் வாக்கினின்று இத்தகைய மொழிகள் வருவது என்னுடைய பெரும் புண்ணியமே. "ஆ! நான் தோல்வி

யடைந்ததற்கு தாங்கள் என்னைப் புகழ்வதாயின், நான் ஜெயமே யடைந்திருந்தால் எவ்வளவு புகழ்ச்சிக்குரியவனாக விருந்திருக்க மாட்டேன். ஆ! நான் தங்கள் விஷயத்தில் கொண்டிருக்கும் விசுவாசம் வெளியிடத் தக்கதல்ல. மேலும் ஒரு இராணியிடம் ஒருவன் வலிய அத்தகைய மொழிகளைக் கூறுவானாயின் அவனுக்குப் பிராணாபத்தாகவே முடியும்.'' என்று மிக்க துதிமொழிகளோடு கூறினன்.

அவன் கூறியதன் கருத்து இன்னதென்று இராணியறிந்து கொண்டாள். எப்போதும் இராணியா யிருக்கும் மாதை யொருவன் தன்னை மணம்புரிந்து கொள்ளும்படி முன்னே கேட்கலாகாது, ஜாடையாக வாவது அச்சங்கதி அவளால் வெளிவந்தபிறகே அவன் நானும் உன்மேல் காதல்கொண் டிருக்கிறேன் என்று கூறவேண்டும். அக்காலத்தில் அவ்வாறு இராணியிடம் நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று வலியக்கூறுபவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டு வந்தது. அவன் கூறியதைக் கேட்ட இராணி,

"ஆ! நீ கூறுவதை நான் அறிந்துகொண்டேன். அதை நான் இராணியாகச் செவியேற்காது, ஒரு சாதாரணமாதைப்போல் செவியேற்றுக் கொள்கிறேன். ஆனல் நீர் அவ்வார்த்தையை வெளியிடலாகாது. ஓ புண்ணியகோடிப் பிரபுவே! இராகவன் இதையறிந்தால் தன் முரட்டுக் கோபத்திற்கு நம்மிருவரையும் பலியாக்கும் குணமுடையவன் என்பதை நீ கருதவில்லைபோலும்'' என்ருள்.

இராணி இவ்வார்த்தைகளைக் கூறி வாய்மூடும்சமயம் அறையின் கதவு படீர் என்று வேகமாய்த் திறக்கப்பட்டதும் இராகவனும் அவன் ஆளான அழகப்பன் என்ற வாலிபனும் அறைக்குள் பாய்ந்து வந்தார்கள். இராகவ

னுடைய கண்கள் சிவந்து அவன்முகத்தில் கோபத்தனல் சுவாலித்துக்கொண் டிருந்தது. அழகப்பன் சட்டென்று புண்ணியகோடியின் தலைப்பக்கம் நின்று கையிற்பிடித் திருந்த ஈட்டியை அவன் மார்புக்குநேராய் ஓங்கிக் கொண்டு அவனை நோக்கி "பத்திரம் எழுந்திருக்கமுயன் ருயோ அதே வினடி சவமாய் விடுவாய்" என்ருன். இவர்கள் வந்ததைக்கண்டதே இராணி தட்டென்றெழுந்து நின்று கம்பீரமும் அதிகாரமு முடைய பார்வையால் இராகவனை நோக்கி "நீ யிங்குவந்தது எனக்குச் சந் தோஷமே. ஆனல், அது மரியாதைக்கும் ஒழுங்குக்கும் முற்றும் மாருன நடக்கையா யிருக்கிறது" என்றதும் அதற்குள் அழகப்பனைப் பார்த்து, "ஆ! இதென்ன விபரீத நடக்கை!" என்ருள்.

இராகவன் "என் ஆள் என்கட்டளைப்படி நடந்து கொள்கிருன்" என்ருன். இராணி "ஓ! இந்த அரண்மனைக் குள் என் அதிகாரத்திற்குமேல் வேறு யார் அதிகாரமும் செல்லாதென்பதை யறியாயோ! அடேபோ அப்புறம்" என்ருள். இராகவன் "அவன் என்கட்டளையை யன்றி வேறெருவர் கட்டளையையும் ஏற்றுக்கொள்வ தில்லை யென்று சத்தியம் செய்துகொடுத் திருக்கிருன். இந்த விவகாரத்தை யடக்கிவிட வேண்டுமெனப் பிரியப்பட் டால் எழுந்து வெளியில் வந்தால் நாம் பேசவேண்டிய விவகாரத்தைப்பேசி முடித்துக் கொள்ளலாம்" என்று கோபத்தோடு கூறினன்.

இராணி:—"நீ என்னை யதிகாரம் செய்கிறவன்போல் பேசு கிருய். மற்ற எல்லாரையும்விட நீ என் குணங்களை நன்ரு யறிந்திருக்க வேண்டும். நான் சாந்தமாகவே இருப்பவளாயினும் மிரட்டலுக்கு அஞ்சுகிறவளல்ல வென்று நீ யறிந்திருக்க வேண்டும்" என்ருள்.

இராகவன் ஆத்திரத்தோடும் கோபத்தோடும்,

"சரி, நீ இரகசியத்தில் கூற இடந்தராத வரையில் பகிரங்கமாகவே கூறுகிறேன். ஓ இராணியே! நீ என்னை மணம்புரிந்து கொள்வதாய் வாக்களித்திருக்கிறாய். நான் நம்பும்படி சத்தியம்செய்துகொடுத் திருக்கிறாய். அவ்வாக்குத்தத்தப்படி நடந்து கொள்ளப்போகிறாயா என்பதைக் கூறவேண்டும்" என்றான்.

இராணி முகம்சிவந்து துணிகரமான பார்வையோடு நிமிர்ந்து நின்று "நீ எந்த அதிகாரத்தால் எடுத்தவுடனே திடீலென்று இந்த விஷயத்தை, அதிலும் அன்னியர் முன்பாகக் கேட்கிறாய்" என்றாள். இராகவன் "ஏனெனில் எனக்குப் போட்டியாய்வரத் தைரியமுடைய ஒருவனுடைய அறைக்கு நீ கள்ளத்தனமாய் வந்தபடியால், நீ கொடுத்தவாக்குத் தத்தத்தை நிறைவேற்றப் போகிறாயா இல்லையா என்று கேட்கிறேன்" என்றான்.

இராணி "ஆ! இத்தகைய அநீத நடக்கை யுன்னிடம் இருக்குமென்று நான் எதிர்பார்க்கவேயில்லை" என்றாள். இராகவன் "என் உன் நடக்கை யெப்படிப்பட்டது? நீ நிரபராதியென்று யாவர் முன்பும் ருசுப்படுத்த வேண்டி உயிருக்குத்துணிந்து யுத்தம் செய்து வெற்றி பெற்று உன்யோக்யதையை நிலைநிறுத்தியதற்கு இது தானா நீ அளிக்கும் பரிசு? அடடா! மாதருடைய அயோக்கியதையும், தந்திரங்களும், சூது, ஜாலங்களும், துரோகங்களும் ஓ கடவுளே! அளவுகடந்தவைகளா யிருக்கின்றன" என்று கூறிக்கொண்டு, மிக்க கோபதீபிதனாக ஆவேசங் கொண்டவன்போல் அறையின்மையத்தில் நின்றான்.

அவனுடைய கோரமான விகாரமுகத்தைக் கண்ட சித்ராங்கி என்னமோ விபரீதம் நடக்கப்போகிறதென்று நடுங்கிக்கொண்டிருந்தாள். புண்ணியகோடியோ சட்

டென்று எழுந்திருக்கச் சக்தியில்லாதவனு யிருக்கிறுன். தலைப்புறம் தன் மேல்சட்டியை யோங்கிக்கொண்டிருக்கும் அவ்வாலிபனைக்காண அவனுக்கு அடங்காக் கோபம் வருகிறது. என் செய்வான். இராணிக்குத் தான் அங்கு வந்தது முட்டாள்தனமென்று மனதிற்பட்டது. ஆயினும் இணக்கமாய்க்கூற மனம் பிடிக்கவில்லை. எப்படிப்பட்ட சமயத்திலும் தன் கம்பீரத்திற்கும் அதிகாரத்திற்கும் தாழ்வாய்த் தோன்றும் வண்ணம் நடந்துகொள்ளச் சம்மதிக்கும் குணமுடையவளல்ல. இச்சமயம் இராகவன் அளவுமீறி விபரீத நடக்கை யுடையவனுவான் என்றும் அவள் மனதிற்குப் புலப்படுகிறது. ஆயினும் சமாதானத்தை யுண்டாக்கும் இனிய மொழிகளைக் கூறப் பிரியமில்லை யாகையால் ஒன்றும் தோன்றுமல் நின்றுள்.

இராகவன் மிக்க கோபமடைந்து "மகாராணி! உம்முடைய விடைக்கே காத்துக்கொண்டிருக்கிறேன். இரண்டிலொரு மறுமொழி கூறும்" என்றுன். இராணி "கூற வேண்டியதொன்றுமில்லை" என மொழிந்து வழிவிட்டு விலகும்படி கையால் சமிக்கை காட்டிவிட்டு வாயிற்படியை நோக்கிச் சென்றுள்.

இராணியின் நடக்கையால் அவள் தன் காதலைப்பற்றியும் தன்னைப்பற்றியும் மிக்க கேவலமாகவும் அலட்சியமாகவும் நடத்துவதாக இராகவனுக்குத் தோன்றியது. குடிகேடியாகிய சித்ராங்கி மொழிந்தவைகளால் இராணி தனக்குத் துரோகம்செய்யக் கருதுகிறுளென்று முன்னமே யவன் மனதில் பூரணசந்தேகம் உதித்திருக்கிறது. ஆகையால் உடனே யவனுக்கு அடங்காக்கோபம் உண்டாய்விட்டது. இராணி வெளியிற்செல்ல இரண்டடி வைத்ததே "ஆ! அசத்தியமாதே! இவ்வளவு சுலபமாய் என்னை ஏமாற்றி விடலாமென்று கருதிவிட்டாய்" என்று

மிக்க ஆத்திரத்தோடு இராணியின் தோளைப் பற்றிக் கொண்டு முறுக்கிச்சுழற்றி "உடனே பணி! பணிந்து ஆண்டவனைத் துதி. உன் யோக்கியதையைக் காப்பாற்றிய இதே வாளுக்கு உன்னை யிரையாக்கி என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்கிறேன்" என்று தன் வாளை யுருவிக் கரத்திற் பிடித்து இராணியின் தலைக்குமேல் ஓங்கிக் கொண்டு அழகப்பனை நோக்கி "அடே! இதைக் கவனி! பத்திரம். என் வாள் இவள்மேல் தாக்கும் அதேவினாடி அந்தத் துரோகியாகிய என் போட்டிக்காரன் இருதயத்தில் உன் ஈட்டியைச் சொருகிவிடு" என்று கர்ச்சித்தான்.

இராகவனுடைய கோரவார்த்தைகளைக்கேட்ட சித்ராங்கி "அய்யோ! இதென்ன அநீதம்" என்று அலறிக் கொண்டுபோய் அவன் வாளேந்திய கரத்தைப்பிடித்தாள். இராகவன் "சட் நீபோ அப்புறம்!" என்று அவளை முரட்டுத்தனமாய் உதறிவிட அவள் எட்டப்போய் விழுந்து அய்யையோவென்று பிரலாபித்துக்கொண்டே இருகரங்களாலும் முகத்தை மூடிக்கொண்டாள்.

இராணி தரையில் விழுந்தவள் முழங்காற்படியிட்டபடி யிருந்து தலை நிமிர்ந்து இராகவனை நோக்கி "அய்யோ கடவுளே! நீ இப்படி அக்கிரமமாய் ஒருமாதை அதிலும் நீ காதலித்த மாதைக் கொல்லமாட்டாய். நீ அத்தகைய கொடிய பாபிஎன்று நான் நம்பமாட்டேன்" என்றாள்.

இராகவன் மிக்க கடுகடுத்து ஆத்திரத்தோடு "இல்லையில்லை, என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளாது விடமாட்டேன். என் கையிலிருந்து இப்போது உன்னை மீட்டுவிட எப்படிப்பட்டவர்களாலும் முடியாது. நீ கடவுளைத் துதிக்க இரண்டே நிமிடம் அளிக்கிறேன். சீக்கிரம் சீக்கிரம்....." என்றான்.

அச்சமயம் இராணி தன் ஆயுள் முடிவிற்குவந்துவிட்ட

தென்று நன்றாய் உணர்ந்து கொண்டாள். அந்த ஒரு விநாடியில், அய்யோ! தன் தவறான நடக்கைகளை யெல்லாம் எண்ணி மனம் நொந்தாள். அவை யாவும் ஒரு இமைகொட்டும்நேரத்தில் அவள் மனக்கண்முன் தோன்றி மறைந்தன. இவை யாவும் படபடவென்று ஒரு விநாடியில் நடந்துவிட்டன.

கடைசியில் தான் தப்புவதில்லை யென்ற துணிகரத்தால் வாய்விட்டு "அய்யோ கடவுளே! இது நிச்சயமா! ஓ! உதவி உதவி" என்றதும், அதேவிநாடி அவள் மனதில் மின்னல்போன்று ஒரு நினைவுதோன்றியதும், "ஓ என் நண்பனாகிய மாயசிங்கனே! இச்சமயம் நீ யருகிலிருந்தால் என்னைக் காப்பாற்று" என்று அலறிக் கூவினாள்.

இராணி யவ்வாறு கூறியசத்தம் அடங்குமுன்னமே, அதே அறையில் ஒரு சுவரிலிருந்த கள்ளக்கதவு படீர் என்று திறக்கப்பட்டதும், அவ்வழியாய்ப் பாய்ந்து வந்தது யார் என்று அங்கிருந்தவர்கள் அறிவதற்குள், பளிச் சென்று மின்னல்போல் ஒரு வாளாயுதம் மின்னியதும் இராகவன் ஓங்கிப்பிடித்த கத்தி இரண்டு மூன்று துண்டுகளாக உடைந்து விழுந்தது. அதே விநாடி அவ்வாறு அவன் கத்தியையுடைத்த மனிதன் அவன் சட்டையின் கழுத்துப்பட்டையை யிறுக்கிப் பிடித்துக் கொண்டான். இராகவன் ஒரு சிறுகுழந்தை ஒரு இராக்ஷதன் கையில் பிடியுண்டதுபோல் சிக்கிக்கொண்டு அசைய முடியாமல் நின்றான்.

நேயர்களே! அத்தகைய ஆபத்தில் இராணிக்கு உதவிசெய்ய வந்தவன் மாயசிங்கனே யன்றி வேறில்லை. இச்சமயம் அவன் தனியாகவரவில்லை. அச்சுதன், ஜக்கன், கிருஷ்ணன் மூவரும் அவன்கூட வந்தார்கள். மாயசிங்கன்

இராகவனைப் பிடிக்கும்போதே அச்சுதன் ஒரு பாய்ச்சலாய்ப் பாய்ந்து புண்ணியகோடிப் பிரபுவின்மேல் ஈட்டியை நீட்டிக்கொண்டிருந்த அழகப்பனைப் பிடித்து அவன் ஈட்டியைப் பிடுங்கிக்கொண்டு அவன் கொட்டத்தை யடக்கிவிட்டான். மாயசிங்கன் இராகவனைப் பிடித்துக்கொண் டிருக்கும்போதே ஐக்கன், கிருஷ்ணன் இருவரும் அவன் கரங்களைப் பலமான கயிறுகளாற் கட்டிவிட்டார்கள்.

இராணி யாரோவந்ததை யறிந்து துள்ளியெழுந்து வந்த ஆட்களைக் கண்டதும் மூர்ச்சை யடைந்து, அச்சமயம் அவளைநோக்கி ஓடிவந்த சித்ராங்கியின்மேல் சாய்ந்துவிட்டாள். இராணிக்கு மறுபடி ஸ்மரணை வந்தபோது சித்ராங்கியும் புண்ணியகோடிப் பிரபுவும் மட்டுமே அவள் எதிரில் இருந்தார்கள். இராணி சித்ராங்கியை நோக்கி மிக்க கலவரத்தோடும் வியப்போடும் "ஆ! அவர்களெல்லாம் எங்கே? மாயசிங்கனும் அவன் ஆட்களும் எங்கே? இராகவன் எங்கே?" என்றாள். சித்ராங்கி, "அய்யோ! இராகவனை மாயசிங்கன் கட்டிப் பிடித்துக்கொண்டுபோய் விட்டான். போகும்போது 'இராகவன் அடியோடு வேறு குணமுடைய மனிதனாக மாறியபின்பே நீங்கள் அவனைக் காண்பீர்கள்' என்று கூறினான்" என்றியம்பித் தேம்பித் தேம்பி யழுதாள்.

37-வது அத்தியாயம்

குசலாம்பாளும் வில்வநாதனும் சந்தித்தல்—இரண்டாக அறுக்கப்பட்ட சங்கிலித் துண்டுகள்—துயரமான பிரிவினை—பவழத்தீவிலுள்ள வயோதிகன் அங்கிருந்து யாத்திரை புறப்படல்—மூன்றுமாதம் கழித்து டாக்டருக்கும் பத்மநாயகிக்கும் நடக்கும் சம்பாஷணை—பல மர்மங்கள் வெளியாதல்.

முன் அத்தியாயத்திற் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்த அதேதினம் மாலை குசலாம்பாள் மாளிகையின் தோட்டத்தில் உல்லாசமாய் உலவிக்கொண் டிருந்தாள். அவள் முன்னாள் யுத்தம் நடந்தவிடத்தில் ஜெயமடைந்த வாலிபவீரன் தனக்கு அச்செயத்தின் அறிகுறியாகிய இறகை யளித்ததைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டே சென்றாள். அச்சமயம் தோட்டத்தின் வேலியோரத்தில் செல்லும் பாட்டையிலிருந்து ஒரு சந்தோஷமான சத்தமுண்டாவதைக் கேட்டுத் திரும்பிப்பார்த்தாள். உடனே அவள் முகத்தில் மிக்க சந்தோஷமான பிரகாசம் உண்டாயிற்று. ஏனெனில் பாதையில் சென்றுகொண் டிருக்கும் போது அவளைக் கண்டு அவ்வாறு சந்தோஷக் கூச்சலிட்டவன் வில்வநாதனே.

வில்வநாதன் உடனே வேலியைத் தாண்டிக் குசலாம்பாளருகில் வந்து "ஆ! கன்னிகையே! கடைசியில் சந்தித்தோம். கடவுளே! அன்று அக்கோரமும் பயங்கரமுமான கூட்டத்தில் இருவரும் சிக்கிக்கொண்டு ஒருவர்போனவழி யொருவர்க்குத் தெரியாமல் பிரிந்துவிட்டது முதல் நான் உன்க்ஷேமத்தை யறியாததால் எவ்வளவோ வேதனைப்பட்டுக்கொண் டிருந்தேன். நேற்று

186492

யுத்தம் நடந்தவிடத்தில் உன்னைக் கண்டபின்பே என்மனதிலிருந்த அவ்வேதனை யொழிந்தது." என்றதே,

குசலாம்பாள் மிக்க சந்தோஷமடைந்து "ஆ! நேற்று எனக்கு அப்பரிசை யளித்தது நீ தான்" என்றாள். வில்வநாதன் "ஆம். நான் ஜெயித்ததன் அறிகுறியை யுனக்களித்தேன்" என்றான். அச்சமயம் அக்கன்னிகையின் கண்களினின்றும் தாரைதாரையாய் நீர் வடிவதைக்கண்டு மிக்க வியப்பும் கலவரமு மடைந்து, "ஆ! கன்னிகையே! என்செய்கை யுனக்கு இத்தகைய வியாகூலத்தை யளித்ததாக விருந்தால் நான் மிக்க பாபம் செய்தவனாக என்னை மதித்துக்கொள்ள வேண்டும். உன் துயரத்தை நீக்க என் உயிரையேனும் தத்தம்செய்ய ஆயத்தமா யிருக்கும் நான் என் மனமறிந்து உனக்கு எள்ளளவு துயரையேனும் உண்டாக்கத் தக்க செய்கையைச் செய்வேனோ" என்று பரிதபித்தான்.

குசலாம்பாள்:—நீ களங்கமற்ற மனமுடையவ னாதலால் நான் எதையும் மறைக்காமல் உனக்குக் கூறவேண்டியதே. ஆனால் அதனால் உனது மனதிற்கு எங்கே வியாகூல முண்டாகுமோ வென்று அஞ்சுகிறேன்.

வில்வ:—உனக்குண்டா யிருக்கும் துயரத்திற்கு நான் காரணமா யிருக்கிறவரையில் அத்துயரத்தை நான் எப்படியும் நீக்கிவிடுவேன். ஆகையால் தயவுசெய்து அது எதுவாயினும் அஞ்சாமல் கூறவேண்டுகிறேன்.

குசலாம்:—நான் உன்னைச்சந்தித்ததும் நீ என்னைத் துஷ்டகேதுவின் வீட்டிலிருந்து விடுவித்ததும் யாவும் என் தாய் தந்தையர் அறிவார்கள். நீ யவனோடு சண்டையிட்டு அவனை வீழ்த்திவிட்டுப் பிறகு நம்மை அவர்கள் துரத்திவரும்போது நீ இந்த ஊதுகுழலையூதியவுடன் உனக்குச் சில வீரர்கள் உதவிவந்ததைப்

பற்றி நான் கூறியபோது பிரபு அந்த வீரரின் தலைவன் கள்ளர் தலைவனுகிய மாயசிங்கன் என்று கூறினர்.

வில்வ:—“ஆகா! தெரிந்து கொண்டேன்; தெரிந்து கொண்டேன். அது சுபாவமே. அவர்கள் நானும் கள்ளக் கூட்டத்தைச் சேர்ந்தவனென்று கருதியது குற்றமல்ல. சந்தர்ப்பம் அவர்களையப்படி நினைக்கச்செய்கிறது. ஆனால் கடவுள் தயவால் என்மனதில் நான் நினைக்கத்தக்க தலை நாணும் விஷயம் ஒன்றேனுமில்லை. அத்தகைய விஷயமாவது பாபச்செய்கையாவது நான் இதுகாறும் செய்ததேயில்லையென்று மனோ நிம்மதியோடு கடவுள்முன் கூறுவேன்” என்றான்.

வாலிபன் மனதிலுண்டான களங்கமற்ற நாணமில்லாத சந்தோஷப் பிரகாசத்தாலும் அவன் வார்த்தைகளாலும், அவன் கள்ளர் கூட்டத்தில் சேர்ந்தவனல்லவென்று குசலாம்பாள் அறிந்து கொண்டாள். உடனே அவள் வியாகூலம் அடியோடு நீங்கி அவளுக்கு மிக்க சந்தோஷமுண்டாயிற்று. அக்கன்னிகை வாலிபனை நோக்கி “நீ என்னை மன்னிக்க வேண்டும்” என்றாள்.

வில்வ:—உன்னை மன்னிக்கவா! ஏன்? நீ கூறும் எதனாலும் எனக்குக் கோபமுண்டாகாது. பிரபு என்றது யார்? உன் தந்தையா?

குசலா:—ஆம். நான் ஆத்மநாதம் பிரபுவின் ஏகபுத்திரி. என் தாய்தந்தையர் உன்னைக் கண்டு நீ எனக்குச் செய்த பேருதவிக்காக உனக்கு வந்தனமளிக்க மிக்க சந்தோஷப் படுவார்கள். ஆகையால் தயவுசெய்து என்கூட வரவேண்டும்.

வில்வ:—“இல்லை இல்லை. இப்போது வேண்டாம். நான்

ஒரு பிராணிக்கேனும் துன்பம் செய்தவனல்ல. அந்தோ! என்மனம் ஒரு களங்கமு மற்றதாயினும், பிரபுக்கள் உயர்ந்த அந்தஸ்திலிருப்போர், இத்தகையோர்களோடு சகவாசம்செய்ய நான் தகுதியுடையவனல்ல. ஏனெனில் உன் தாய்தந்தையர் நீயார் என்று என்னைக்கேட்டால் நான் என்னசொல்வது? தாயின் அன்பும் தந்தையின் ஆதரவும் இன்னதென்றே நானறியேன்" என்று விசனத்தோடு கூறினன்.

குசலாம்பாள் மிக்க பரிதாபமடைந்து, "அப்படியானல் என் பெற்ருேர் உன் விஷயத்தில் அதிக அன்பும் இரக்கமும் காட்டி நடந்து கொள்வார்கள். உண்மையாகவே அவர்கள் மிக்க நல்லவர்கள்; யாவரிடத்திலும் அன்பும் தயையும் காட்டி நடப்பவர்கள்" என்ருள்.

வில்வநாதன்:—"ஓ அன்பு நிறைந்த கன்னிகையே! உனக்கு மிக்க வந்தன மளிக்கிறேன். ஆயினும் இச்சமயம் வேண்டாம். நான் பூர்வீகமான ஒரு உயர்ந்த வகுப்புக் குடியில் பிறந்தவனென்று மட்டும் எனக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் என்பெற்ருேர் யாராகவிருக்கலாகு மென்பது கொஞ்சங்கூட எனக்குத் தெரியாது. ஒரு சமயம் இந்த அடையாளத்தால் போகப்போக அந்த இரகசியம் வெளியாகலாகு மென்று நம்புகிறேன்" என்று கூறிக்கொண்டே தன்மார்பில் தொங்கவிட்டிருந்த அப்பொற் சங்கிலியை யெடுத்துக் குசலாம்பாளுக்குக் காட்டினன்.

அதைக்கண்டதே அவள் சொல்லொணு வியப்பும் பெருந்திகிலும் அடைந்து "அய்யோ கடவுளே! இதென்ன நான்பார்ப்பது?" என்று முகம் வெளுத்துக் கூறிக்கொண்டே சட்டென்று தான் அணிந்திருந்த பாதிச்சங்கிலியை வெளியிலெடுத்தாள். அதைக் கண்டதே வில்வ

நாதன் அவள் கரத்திலிருந்து அதைப் பிடுங்கிக்கொண்டு இரண்டின் முனையி லிருக்கும் புருக்களைப் பொருத்திப் பார்த்து, "ஓ! இதோ இரண்டும் ஒன்றாகப் பொருந்தி விட்டன. இவையிரண்டும் சேர்ந்தால் முழுச்சங்கிலியாகிறது. ஒகோ! இதில் என்னமோ பெரியமர்மம்—பெரிய இரகசியம்—அடங்கியிருக்கிறது'' என்று கூறிக் குசலாம்பாள் சங்கிலியை யவளிட மளித்துவிட்டான்.

குசலாம்பாள் ஆம் ஆம் மர்மம் மர்மம் என்று கண்ணீர் பெருக்கினள். ஏனெனில் அது விஷயமாகத் தன் தந்தை கூறிய கண்டிப்பான எச்சரிக்கை அவள் நினைவிற்கு வந்துவிட்டது. வில்வநாதன் மிக்க வியப்பும் கலக்கமு மடைந்து "என்ன இரகசியம் இதிலடங்கி யிருக்கிறது? இதன் அர்த்தமென்ன? என்னைக் கலவரத்தில் விடாது தயவுசெய்து கூறு" என்று ஆவலோடு கேட்டான்.

குசலாம்பாள் "இதன் அர்த்தம்—அர்த்தம்—நாம் இருவரும் உடனே பிரிந்துவிட வேண்டும். இனிச் சந்திக்கவேகூடாது. இன்னும் நான் உன்னை மறந்து விடவேண்டும் என்பதே'' என்று கூறிவிட்டுத் திரும்பித் துரிதமாய் மாளிகையை நோக்கிச் சென்றாள். இன்னும் சற்றுநேரம் அங்கிருந்தால் மன உறுதிகுன்றிவிடும்; பிறகு தந்தையின் கட்டளைக்கு மாறாக நடந்ததாய்விடும் என்ற பயத்தால் அங்கு ஒரு விநாடிகூட நிற்காமல் ஓடிவிட்டாள்.

இதைக்கண்ட வில்வநாதன் பிரமித்துப் பேசவும் நாவெழாமல் மரம்போல் அந்த விடத்திலேயே நின்று அவள் தன் கண்களுக்கு மறையுமட்டும் பார்த்துக்கொண்டேயிருந்தான். அவன் மனதில் மிக்க வியப்பும் குழப்பமும் துயரமும் உண்டாகி விட்டன. அக்கன்னிகை கூறிய மொழிகள் அவனுக்குச் சற்றும் விளங்கவில்லை. கடைசி

யில் "ஆம் ஆம்; மறுபடி சந்திக்கலாகாதுதான். அய்யோ கடவுளே! எப்போதும் சந்திக்காமலே யிருந்திருக்கலாகாதா!" என்று கூறிக்கொண்டே வியாகூலத்தோடு தன் வீட்டிற்குத் திரும்பினன்.

மறுநாள் காலை ஆத்மநாதம் பிரபு, அவர்மனைவி, புத்திரி இவர்கள் இரண்டு மூன்று ஆட்களோடு மாளிகையைவிட்டுப் புறப்பட்டுச் சுமார் ஐம்பதுமைல் தூரத்தில் கடற்கரை யோரத்திலிருந்த தங்கள் நாட்டுமாளிகைக்குச் சென்றார்கள்.

* * * * * *

* * * * * *

நேயர்களே! பவழத்தீவி லிருக்கும் நமது வயோதிகனைக்கண்டு பல நாட்கள் கழிந்தனவே. இப்போதவன் எந்த நிலைமையி லிருக்கிறனென்று பார்ப்போம்.

மேற்கண்ட சம்பவங்கள் நடந்த மறு நாட்காலை ஏழு மணியிருக்கும். பவழத்தீவில் இளஞ்சூரியன் நன்றாய்ப் பிரகாசித்துக்கொண் டிருக்கிறது. குளிர்ந்தகாற்று இரமணீகரமாய் வீசிக்கொண் டிருக்கிறது. வசந்தகால மானதால் பல நிறங்களையுடைய அழகியமலர்கள் நறுமணத்தை வீசிக்கொண் டிருக்கின்றன. அத்தீவில் உற்பத்தியாகும் பலவிதக் கனிவகைகளும் ஏராளமாக விருக்கின்றன.

நமது கிழவன் தன் குடிஸையினின்று வெளியில் வந்து அதை உற்று நோக்கிக்கொண் டிருக்கிறன். ஏனெனில் அன்றுதான் அதையவன் கடைசியாகக் காணும் நாள். அன்று ஒரேமட்டாய் அத்தீவையே விட்டுப் பிரிந்து விடப்போகிறன். அக்குடிசை அனேக வருடங்களாக அவன் வாசஸ்தலமாக விருந்து கொடிய வெயிலுக்கும் மழைக்கும் அவனுக்கு அடைக்கல ஸ்தானமாக விருந்து

வந்தது. ஆகையால் அதைவிட்டுப் பிரிவது அவனுக்கு ஒரு உண்மையான சிநேகனை விட்டுப்பிரிவதுபோ லிருந்தது. கடைசியில் அரிதிற்பிரிந்து அங்கிருந்து கடலோரம் தன் தெப்பம் இருக்குமிடத்திற்குச் சென்றான். நேயர்களே! இப்போது அத்தெப்பம் மிக்க உறுதியாகக் கட்டப்பட்டிருக்கிறது. பனை நாரினால் உறுதியாகத் திரிக்கப்பட்ட கயிறுகளால் அத் தெப்பத்திலுள்ள மரங்கள் ஒன்றோடொன்று மிக்க சாமார்த்தியமாகக் கட்டப்பட் டிருக்கின்றன. அதன்மேல் பனைநார்க் கயிறுகளால் பின்னப்பட்ட தடித்தபாய்கள் விரிக்கப்பட்டிருக்கின்றன. அதன் மையத்தில் மூன்றடி உயரம் மூன்றடி அகலம் எட்டடி நீளமுள்ள ஒரு சிறுகுடிசை கட்டப்பட் டிருக்கிறது. அதன் மேற்கூரையும் பக்கங்களும் தென்னை ஒலைகளால் மழைச்சலம் ஒழுகாவண்ணம் மூடப்பட் டிருக்கின்றன.

கடவுளைப் பூரணமாக நம்பி, இந்த அற்பத் தெப்பத்தைப் பெரிய நாவாயாகக்கொண்டு பல்லாயிரம் மைல்கள் விஸ்தீரணமுள்ள கடலைக்கடக்க இக்கிழவன் துணிவு கொண்டிருக்கிறான். கடவுள் அருளில் நம்பிக்கைவைத்துப் புத்திசாலித் தனமாகத் தைரியத்தோடும் வைராக்கியத்தோடும் முயல்வோர்கட்கு எந்தசத்காரியமும் கைகூடும் என்பதற்கு நமது கிழவனையே முதற்சாட்சியாய்வைத்துக் கொள்ளலாம். ஆம். தெப்பம் கவிழாமல் சென்றாலும் ஆகாரம் ஏது என்று நண்பர்கள் கருதலாகும். அறிவும், வைராக்கியமும், தைரியமும், ஊக்கமுமின்றேல் அக்கிழவன் ஏகாங்கியா யத்தீவில் சுமார் அறுபது வருடங்கள் ஜீவித்திருப்பானா? ஒருபோதும் முடியாது. கிழவன் அங்கு கிடைக்கும் பிரம்மாண்டமான தேங்காயோடுகளில் வேண்டியமட்டும் அனேக பாத்திரங்கள் செய்துகொண்டான். சிறியதுவாரம்மட்டும் செய்யப்பட்ட குடுக்கைகள் பலவற்

றில் சுமார் நாலைந்து மாதங்களுக்குப் போதுமான சுத்த ஜலம் நிரப்பிக்கொண்டான். அத்தகைய குடுக்கைகளில் கை நுழையத்தக்க துவாரம் செய்த பலவற்றில் ஆமை, பட்சிகள், முயல்கள், மச்சங்கள், இவற்றின் மாமிசங்களைப் பதம் செய்து நிரப்பிக்கொண்டான்.

மீன் பற்களைத் தூண்டில் முட்களாகச் செய்துகொண்டு பனைநாரால் சன்னமான கயிறு திரித்து மீன் பிடிப்பதும், அதேகயிறுகளால் வலைபின்னிப்பட்சிகள் முயல்கள் இவற்றைப் பிடிப்பதும் அவனுக்கு மிக்க வழக்கமாய்விட்டன. மேற்கண்ட ஆகாரங்களோடு ஏராளமான தேங்காய்களும், தேங்காய்ப்பாலிற்செய்த ஒருவித சாராயமும் போது மான அளவு எடுத்துக்கொண்டான். இவை யாவற்றையும் தன் தெப்பத்தின் மையத்தில் குடிசையைச் சுற்றி வைத்து மேலே பாய்கள் போட்டு அவை நழுவிவிடாமலும் அலையடித்தாலும் கொண்டுபோகப்படாமலும் இருக்கும் வண்ணம் பலமாகக் கட்டிவிட்டான்.

இக்கிழவன் நாலைந்து பெரிய பாய்கள் பின்னித் தன் தெப்பத்திற்குப் பாய்மரங்கள் கட்டியதோடு மரக்கிளைகளை வெட்டி ஐந்தாறு துடுப்புகளும் ஆயத்தம் செய்துகொண்டான். தன்னிடமிருந்த தச்சு ஆயுதங்களையும் மறவாமல் தெப்பத்தின்மேல் வைத்துக்கொண்டான். யாவும் ஆயத்தம் செய்துகொண்டபின் காற்றுவாட்டமாய் அடிப்பதைக்கண்டு படகின்மேலேறிக்கொண்டு ஆண்டவனை மனதாரத்துதித்துத் தெப்பம் கரையோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்த கயிற்றை யவிழ்த்துவிட்டான். உடனே தெப்பம் அச்சிறு குடாவினின்று புறப்பட்டு அகன்ற கடலில் பிரவேசித்தது.

தான் ஏறிச்செல்லும் தெப்பம் எத்திசையை நோக்கிச் செல்கிறதென்று கிழவனுக்குத் தெரியாது. எங்கா

வது ஒரு கரைபோய்ச் சேரும் என்பதே அவனுடைய கோரிக்கையும் நம்பிக்கையும். காற்றின் வேகத்தால் தெப்பம் வேகமாய்ச் சென்றது. கிழவன் தீவைப்பார்த்துக்கொண்டே சென்றான். வரவர அத்தீவு பார்வைக்குச் சிறியதாய்க்கொண்டே வந்தது. ஆ! தான் பலவருடங்களாய் வசித்துக்கொண்டிருந்த தீவு—தனது சொந்தக்காணியாட்சிபோலிருந்த தீவு—இவ்வளவு காலமாகத் தனக்கு இடங்கொடுத்து — கப்பற்சேதமடைந்து பிராணபத்திலிருந்த தனக்கு இடமளித்து-நல்ல ஆகாரங்களைக் கொடுத்துத்தன்னைக் காப்பாற்றிவந்ததோடு தான் கடலைக்கடந்து போகவேண்டியதற்கு அவசியமான கருவிகள் யாவுமளித்த அத்தகைய தீவை அடியோடு விட்டுப் பிரிவதெனின் அக்கிழவனுக்கு மனதில் கஷ்டமாகவே யிருந்தது. ஆயினும் தன் பிறப்புக்கிடமாயிருந்ததும், தன் சந்ததியார் வசிப்பதுமாகிய ஜன்மபூமியைக் காணவேண்டும், நமது குடும்பத்தைப்பற்றி யிருக்கும் பயங்கரமான அகோர சாபம் ஒழிந்த சந்தோஷ சமாசாரத்தை நம் சந்ததியாருக் கறிவிக்க வேண்டும் என்ற பேராவலினால் அத்தீவைவிட்டுப் பிரியத்துணிந்தான். போகப்போகச் சிறுத்துக்கொண்டிருந்த தீவு பிறகு ஒரு கருத்த புள்ளிபோலும் புகைபோலும் தோன்றிக் கடைசியில் அடியோடு மறைந்து, நாற்புறமும் அகன்ற ஒரே கடல் மயமாகிவிட்டது.

அன்றிரவு காற்றும் மழையும் கிழவனுக்கு மிக்க பயத்தையுண்டாக்கின. மறுநாள் வானம் களங்கமற்றிருந்தாலும் கடலில் தெப்பத்தினருகில் செல்லும் பெரிய மச்சங்களையும், பறக்கும் மச்சங்களையும் கண்டு வயோதிகன் ஆச்சரியமும் பீதியுமடைந்தான். ஆனால் தன் தெப்பம் எதனாலும் பழுதடையாமலும் தன் பொருள்களில் எதற்கும் கொஞ்சமும் சேதம் நேராமலும் இருந்தது அவ

னுக்கு ஒருவிதத் தைரியத்தையும் நம்பிக்கையையும் உண்டாக்கிற்று. இவ்வாறு தனியே கடலில் முப்பது நாள் பயணம் சென்றான்.

* * * * *

அரண்மனையில் மாயசிங்கன் இராகவனைப் பிடித்துக் கொண்டு சென்றது முதலிய சம்பவங்கள் நடந்து மூன்று மாதங்களாயின.

ஒருநாள் மாலைப்போது வசந்தகாலத்தில் சுகமான காற்று வீசிக்கொண்டிருக்கிறது. அரண்மனையைச்சேர்ந்த நந்தவனத்தில் டாக்டர் தங்கவேலுப்பிள்ளையும் பத்மநாயகியும் உலவிக்கொண்டிருக்கிறார்கள். பத்மநாயகியின்முகம் வாட்டமடைந்திருக்கிறது. ஆனால் அவளுடைய கம்பீரமான அழகுமட்டும் சற்றும் குன்றவில்லை. அவள் டாக்டரை நோக்கி "நான் என் புத்திரன் போய்விட்டதற்கு விசனப்படலாகாதென்றும், இராணியினிடத்தில் நமக்கிருக்கும் செல்வாக்கு இராகவன் இருந்தபோதிருந்தது போலவே, புண்ணியகோடிப்பிரபு இராணியின் காதலனாகவிருக்கும் இப்போதும் இருக்கிறதென்றும் கூறுகிறீர்" என்றாள். டாக்டர் "உன் வியாகூலம் இன்னதென்று நான் உணருகிறேன். உன் புத்திரன் க்ஷேமமாகவேயிருக்கிறான் என்பதில் ஐயமேயில்லை" என்றார்.

பத்மநாயகி:—க்ஷேமமாகவே! ஆனால் அந்த மாயசிங்கன் என் புத்திரனுக்கு என்மேல் பூரண வெறுப்புண்டாகும் வண்ணம் செய்துவிடுவான். இல்லையேல் அவன் இதுகாறும் எனக்கு ஒருவார்த்தைகூடத் தெரிவிக்காமல் இருப்பானா?

டாக்டர்:—மாயசிங்கனும் அவன் ஆட்களும் இராகவனைப் பிடித்துக்கொண்டு புறப்பட்டதும் நேராகக் கள்ளர் வசிக்கும் இடத்திற்குச் சென்றார்கள். அங்கு சென்

றதும் மாயசிங்கனும் இராகவனும் மாயசிங்கனுடைய அழகாய் அலங்கரிக்கப்பட்ட அறையில் இரண்டு மூன்றுமணி நேரம் இரகசியமாய்ச் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் பூபாலன்கூட அங்கிருக்கலாகாதென்று வெளியிலனுப்பப்பட்டபடியால் அவர்கள் பேசியது இன்னதென்று கொஞ்சமும்தெரியாது. அதன்பிறகு கொஞ்சம் ஆகாரம் பொசித்துவிட்டு இருவரும் மூன்று நான்கு ஆட்களைமட்டும் கூட அழைத்துக்கொண்டு குதிரையேறி யெங்கோ போய்விட்டார்கள். இச்சங்கதிகள் மட்டில் என் உளவாளியாகிய பூபாலன் அறிந்து வந்து கூறினன்.

பத்மநாயகி:—இராகவன் சந்தோஷமாகவே சென்றுனென்றீர். அவர்கள் வர அதிககாலம் செல்லும் என்று தெரிகிறதென்றீர்.

டாக்டர்:—ஆம். அவர்களிருவரும் அறையில் பேசிக்கொண்டிருந்து வெளியில் வந்ததுமுதல் இராகவன் சந்தோஷமாகவே மாயசிங்கனிடம் அன்போடும் மரியாதையோடுமே பேசிக்கொண் டிருந்தானும். அவர்கள் சென்றது எங்கென்று ஒருவருக்கும் தெரியாது. ஆனல் தான் திரும்பிவரும்வரை அச்சுதனை அக்கூட்டத்தின் தலைவனுக நியமித்துவிட்டு பூபாலனை நோக்கி "நீ யுன் வீடுபோய்ச் சேரலாம். மறுபடி நான் உன்னை யழைப்பித்துக்கொள்ள ஐந்தாறு மாதங்கள் செல்லலாகும்" என்று கூறினனும். இவற்றுல் அவர்கள் திரும்பிவரக் காலம் செல்லுமென்றே தெரிகிறது. ஆயினும் நடந்த விஷயங்களால் இராகவன் மறுபடி வந்து சேருவான் என்றே தெரிகிறது. மாயசிங்கன் மிக்க அதிசயமான ஆளாயினும் அவனிடம் பல உயர்ந்த குணங்களிருப்பதுமட்டும் நிச்

சயம். அவன் இராகவனுக்கு உன்மேல் வெறுப்புண்டாகும் வண்ணம் செய்யமாட்டானென்றே நான் நம்புகிறேன்.

பத்மநாயகி:—அப்பயங்கரமான மாயசிங்கனுடைய எண்ணங்களெல்லாம் ஒருவரும் அறிந்துகொள்ளக்கூடாதவைளாக விருக்கின்றன. ஒன்றுமட்டும் தெரிகிறது. அதாவது அவன் இராகவனைத் தன்னிடம் இட்டுக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறான். ஆனால் அவனே இராகவன்மேல் அந்த அதிசயமான ஆளை யுத்தத்திற்கனுப்பினது என்ன நோக்கங்கொண்டோ எனக்கு விளங்கவில்லை. ஆ! அந்த அதிசய வாலிப வீரனைப்பற்றி எனக்கொரு சந்தேகம் இருப்பதாக முன்பு கூடக் கூறினேனல்லவா.

டாக்டர்:—"அவன் இராகவன்மேல் சண்டைக்கு ஆளையனுப்பியதற்குத் தக்க காரணமிருக்கிறது. ஒருவருக்கும் தெரியாமல் இராகவன் மாயசிங்கனை யாரென்றுணராததால், தன்னோடு யுத்தத்திற்கு வரும்படி யவனை யழைத்தான். அதனால் அவனுடைய அகங்காரத்தைக் கொஞ்சம் அடக்கிப் பிறகு அவனை நல்வழிக்குத் திருப்பவேண்டுமென்று எண்ணியே யப்படிச் செய்தான். மூன்றாவதுநாள் வேறு யாராவது இராகவனோடு யுத்தம்செய்து அவனைத் தோல்வி யடையச் செய்துவிட்டிருந்தால் அந்த வாலிபவீரன் வந்திருக்கமாட்டான். அதனால் தான் அவன் அன்று குறித்தகாலம் முழுமையும் கழியும் வரை பார்த்திருந்து கடைசிச் சமையத்தில் வந்தான். அது விஷயமாக நீ கொண்டிருக்கும் சந்தேகத்தை நான் ஏன் நிவர்த்திசெய்யாமலிருக்கவேண்டும்.

86492
சென்னை-600 033

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் இயற்றியது.

கனகபூஷணம்.

(இது ஓர் கற்புடைய உத்தமியின் அதிசயமான கதை.)

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இக்கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். அதோடு இதில் இவ்விதமான நடவடிக்கைகளும், அவைகளாலுண்டாகும் நன்மை தீமைகளும் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதால், இது வாசிப்பவர்களுக்குச் சகலவித நற்குணங்களையும் போதிக்கக்கூடியதென்பது உண்மை. ஆண்பாலர்; பெண்பாலரிருவர்க்கும் வேணடிய சகல புத்திமதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இது முழுதும் உலக வழக்கத்தையும் அனுபவமான ஆசாரத்தையும் ஒட்டி எழுதப்பட்டிருக்கிறது.

முதல்பாகம் ரூ. 1—12—0 2-ம் பாகம் ரூ. 1—12—0

இரத்தினபுரி இரகசியம்.

ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணர வேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமாயிருக்கின்றனவென்று கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0 2-ம்பாகம் ரூ. 2—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ளு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-া-া-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

இரத்தினபுரி இரகசியம்	ரூ.	அ.	தினகரசுந்தரி	ரூபா 1	0
2-பாகமும் ...	4	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 1-ம் பாகம் ...	1	6	பத்மாஸனி ...	0	14
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	12
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம் 2-பாகமும் ...	3	8	கமலசேகரன் ...	1	12
சுவர்ணம்பாள் ...	0	12	பூங்கோதை ...	0	10
ஆனந்தஸிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸருடைய சரித்திர உபதேசங்கள்	1	12	சகோதரவாஞ்சை	0	6
			ஹை ஸ்கூல் பதிப்பு ...	0	7

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press, Madras.